# தொண்டன்

ஆரம்பம்: 1969-பெப்ரவரி



- வன்முறைகள்
- கொலைகள்
- பழிவாங்கல்கள்
- காணாமல் போதல்கள்



அப்பாவிகளின் இரத்தம்
ஆபேலின் இரத்தம் - அது
அவமாகப் போவதில்லை
ஆண்டவன் சந்நிதியைத் தட்டும்...

ஜூன் - ஜூலை - 2006 சமய - சமூக - இலக்கிய வெளியீடு 15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜூன் - ஜூலை 2006

மலர்-39 இதழ்-04

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
ஸ்ரான்லி பிரபாகரன்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486

விலை - 15/=
ஆண்டு சந்தா : 250/=
ஆறுமாதச் சந்தா : 130/=
(தபாற்செலவு உட்பட)


# உள்ளே




| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு.... - | 01 |
| இன்பமே எந்நாளும்... - | 02 |
| இருவகை இன்பம் - | 04 |
| மறை அறிவை வளர்ப்போம் - | 05 |
| வெள்ளி விழாக் கண்ட ஆயர்.... - | 07 |
| புதுக்கடன் - | 08 |
| தொண்டனின் சில நிமிடங்கள் - | 09 |
| மாணவர் பக்கம் - | 11 |
| சந்தித்த விஷயம் - | 12 |
| மனக்கோலம் - | 13 |
| ஒட்டகம் சொன்ன... - | 16 |
| இலக்கிய மஞ்சரி - | 18 |
| எவர் செய்வார் - | 19 |
| திருகோணமலை இலக்கிய... - | 20 |
| உங்கள் கண்ணோட்டம் - | 21 |
| பழந்தமிழ் இலக்கியத்தில்... - | 22 |
| விவிலியம் கற்போம் - | 23 |
| பரிசுப் போட்டி - | 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

ஓரம் போ ஓரம் போ
வண்டி வருகுது
சச, சச...
வண்டி வயித்துக்கு மேல் ஏறுது
ஆமாம், ஆமாம்
அந்த வண்டிக்குப் பெயர்தான்
அநியாயம், அட்டூழியம்
அராஜகம், அரக்கத்தனம்
அசிங்கத்தனம், அநாகரிகம்
ஏன்? ஏன்?
அதே வண்டியில் இப்போ
விலை உயர்வும், விலைவாசியும்
விதண்டாவாதங்களும் கூட
ஒட்டிக்கொண்டுவிட்டன.

தெரியாதோ நோக்கு தெரியாதோ
பசியும் பட்டினியும்
தலைவிரித்தாடுது தெரியதோநோக்கு
இக்கிக்கி, இக்கிக்கு (சிரிப்பு)
ஒருசாண் வயித்தக் கழுவவே அரும்பாடு
பட வைத்துக் கொண்டு இருக்கிறது
நமது ஜாம்பவான்களின் "சிந்தனைகள்"
தென் இலங்கையில் கிளைமோர் என்றால்
வடகிழக்கில் விமானத்தாக்குதல், மற்றும்
வீடு புகுந்து மிருக வெறியாட்டம்
இக் கடலில் கடல்கன்னி மிதந்து வந்தால்
அக் கடற்கரையில் தோணி படகு, வீடும்கூட எரிப்பு
இப்படியாகத்தான் உள்ளது
இலங்கைத்தீவின் தீவிர நிலைமை
இதற்கெல்லாம் யார் பதில் செய்வார்?

பதிலோ பதிலோ?
இந்த வருடத்தின் தொடக்கத்திலிருந்து
நடந்தேறுகின்ற இழி நிகழ்வுகளுக்கு
யார் தான் உரிமை கோரி இருக்கின்றார்கள்?

"வேலியே பயிரை மேய்கிறது" என்று
உரைகளிலும், பத்திரிகைகளிலும் தான்
படிக்கமுடிகிறது
அது சரி அதுசரி
வேலியா? யார் அந்த அந்தஸ்தைக் கொடுத்தவர்கள்
ஆயுத பலமுடையவர்கள் மக்களை
காத்த காலம் மலையேறி இப்போ பிரிந்து நின்று
ஆளாளுக்கு கொள்கை வகுத்து
ஆயுதங்களோடு தாண்டவமாடுகின்றார்கள்

மொத்தத்தில் இந்துசமுத்திர முத்தினை
விழுங்க வந்த திமிங்கலம் மாத்திரம்
ஏப்பம் விட்டுக்கொண்டு .....

எனவே இலங்கை வாழ் அரசியல் தலைவர்களே!
இவர்களை தலைவர்களாக்கும் மகா ஜனங்களே!
ஏன் ஆயுததாரிகளே!, கோஷமிடும் கும்பலே!
சற்று தரித்து நில்லுங்கள்!
சிந்தனையைச் சீர் செய்யுங்கள்!
பொருளாதாரமும்,அருளாதாரமும்
செவ்வனே செழிப்புப் பெற
ஒன்றிணைந்து செயற்படுங்கள்
வெற்றியும் நமதே, நாளையும் நமதே!
மறுமடலிலும் இணைய ஆசைகளுடன்

**- ஆசிரியர் ~**



## இறைவாக்கு

நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கிறார்?

- மீக்கா 7:8 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வானப் பந்தலின் கீழ் எத்தனை வளமான உலகம்! கடல்கள், மீன்கள், கனிதரும் மரங்கள், பச்சைக்காடுகள், பசுமையான புல்வெளிகள், பயிர்கள், உயிர் மூச்சாய் உலவும் காற்று, உலகுக்கு ஒளிதரும் சூரியன், சொல்லிக் கொண்டே போகலாமே!

இவை எதுவும் யாரும் கேட்டுப் பெற்றவை அன்று. கேளாமலே நாம் வாழ்ந்து அனுபவித்து மகிழ இறைவன் என்னும் அந்த மாபெரும் அன்புச் சக்தி அள்ளிக் கொடுத்த அன்புப் படையல். நல்லவரே கடவுள். இது கூட குறைபாடுள்ள மனித மொழிதான்.

இத்தகைய அருட் சக்தியிடமிருந்து இவ்வுலகுக்குக் கிடைப்பதெல்லாம் அன்பும் நன்மையும், வாழ்வுமே. இவை துன்பம் என்றும் இவை இன்பமென்றும் மனித மனமே அளவிடுகிறது.

சில வேளைகளில் நாம் இன்பம் என்று நினைப்பதே பின்பு துன்பமாகிவிடுகிறது. அதுபோல் துன்பமென்று நினைப்பது பின்பு இன்பமாகிவிடுகிறது.

# இன்பமே எந்நாளும் துன்பமில்லை!



இப்படி இயற்கை எல்லாமே இன்பக் கூத்தாடும்போது துன்பம் எங்கிருந்து வந்தது?

கலவரங்கள், வன்முறைகள், ஈவிரக்கமற்ற படுகொலைகள், பிரிவுகள், முறிவுகள், நோய், கவலைகள், இயற்கைப் பேரழிவுகள். இவ்வாறு எண்ணற்ற துன்பங்கள் மனித வாழ்வை ஆட்டிப் படைக்கிறதே! இதனை ஒவ்வொரு மனிதரும் தங்கள் தங்கள் அனுபவம், அறிவு, நம்பிக்கைகளுக்கேற்ப அர்த்தப் படுத்திக் கொள்கிறார்கள்.

உலக அழிவின் ஆரம்பம் என்பார்,
ஆண்டவன் தரும் தண்டனை என்பார்,
செய்வினையின் பயன் என்பார்,
எல்லாம் அவன் சோதனை என்பார்.
பக்குவப்பட்ட சிலர்
துன்பமும் இன்பமும் வாழ்வின் வடிவம் என்பார்

அன்பு வடிவான இறைவன், அனைத்தையும் அள்ளிக் கொடுத்து வாழ்வளித்த இறைவன் தண்டிப்பவன் என்றும், சோதிப்பவன் என்றும், அழிப்பவன் என்றும் கருதுவது அறிவுடமையா? சித்து வடிவான அந்தப் பரம்பொருள் நம்மைச் சோதித்துத்தானா தெரிந்து கொள்ளவேண்டும்? உண்மையில் இவையெல்லாம் இறைவன் பற்றிய மனித மொழியின் அளவீடுகளே அன்றி வேறன்று

அன்பு வடிவான, நன்மையின் உருவான, வாழ்வின் ஊற்றான, அறிவொளியான இறைவனிடமிருந்து அதற்கு முரணான பிறிதொன்று எவ்வாறு தோற்றம் பெற முடியும்?

அள்ளிக்கொடுக்க அன்பன்றி வேறெதுவும் இல்லாத செய்வதற்கு நன்மை அன்றி வேறெதுவும் இல்லாத அளவில்லா

இன்னொருவகையில் நாம் இன்பமென்று நினைப்பது வேறொருவருக்குத் துன்பமாகிறது. நமக்குத் துன்பமாக இருப்பது பிறிதொருவருக்கு இன்பமாகிறது. ஆகவே இன்பம், துன்பம் என்பதெல்லாம் நமது மனத்தின் அளவீடுகளே!

அதேவேளை நமது சுயநலத்தாலும் அறியாமையாலும் விளைவதும் நாம் துன்பமென்றும், தீமை என்றும் இனம் காண்பதுமான அனைத்தையுமே இன்பத்தின் கருவியாக்கி அருள் பொழிவது இறைசக்தி.

இந்த மாபெரும் பிரபஞ்ச சக்தியின் ஊற்றாய் விளங்கும் அந்த அன்புச் சக்தியை ஆழ்ந்து உணர்ந்து கொண்டோர், பிரபஞ்ச இயக்கத்தின் செல்நெறியைப் புரிந்து கொண்டோர் இறைவனின் திட்டத்தில் என்றும் இன்பமே, எல்லாம் இன்பமே என்பதை விளங்கிக் கொள்வர். உலக வாழ்வின் ஓட்டம் எல்லாம் இன்பப் பெருங்கடலை நோக்கிய பயணமே.

"அன்புப் பெருக்கால் எமை ஆளவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே".

-மலர்வேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் நாவண்ணன் காலமானார்



கவிஞரும், எழுத்தாளருமான நாவண்ணன் (M.சூசைநாயகம்) அவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 15ம் திகதி கொழும்பில் காலமானார். இவரது நல்லடக்க ஆராதனைகள் மன்னார் ஆயர் பேரருள் திரு இராயப்பு யோசப் ஆண்டகை தலைமையில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெற்றன.

கத்தோலிக்க இலக்கிய உலகில் பெரிதும் அறியப்பட்ட நாவண்ணன் அவர்கள் சிறுகதை, கவிதை, கட்டுரை, மேடை, வானொலி நாடகம், ஓவியம், சிற்பம் என பல்துறை வல்லுனராகத் திகழ்ந்தவர். சிலகாலம் புதிய உலகம் மாத சஞ்சிகையின் துணை ஆசிரியராகவும் விளங்கினார். புதிய உலகம் வானொலி நிகழ்ச்சிக்காகவும் பல்வேறு ஆக்கங்களைப் படைத்தளித்துள்ள நாவண்ணன் அவர்கள் தமிழினத்தின் விடிவுக்காய் உணர்ச்சி பெருக்கோடு உழைத்தவர். தொண்டன் சஞ்சிகையில் தொடர்ந்து வெளிவந்த இவரது 'பயணம் தொடர்கிறது' தொடர்கதை இலங்கைத் தமிழ் மக்களது விடுதலைப் பயணத்தின் ஒரு கால கட்டத்தை ஆவணமாகப் பதித்துள்ளதோடு பாரட்டுக் களையும் பரிசையும் பெற்றுக்கொண்ட படைப்பாகும். இது பின்னர் தொண்டன் வெளியீட்டகத்தால் நூலாகவும் வெளியிடப்பட்டது. பலநூல்களுக்கு ஆசிரியரான நாவண்ணன் தமிழிலக்கிய உலகில் பெரிதும் பேசப்படாவிட்டாலும் கத்தோலிக்க இலக்கிய உலகுக்கு கணிசமான பங்களிப்புச் செய்தவர். அன்னாரது மறைவுக்கு தொண்டன் அஞ்சலித்து நிற்கிறது.

## ஒரு புனிதனின் தோற்றம்

அய்யனை மனத்திலேந்தி
அருளினை முகத்திலேந்தி
கையினில் பாலனேந்தி
கருணையை விழியிலேந்தி
மெய்யினை நாவிலேந்தி
வேதத்தைச் சொல்லிலேந்தி
உய்வினைத் தன்னுள் ஏந்தி
உத்தமன் தோன்றலானான்!

துறவது தூய்மையாக
தொண்டது உயிரேயாக
அறமது வழியேயாக
அற்புதம் பிறருக்காக
குறையது அறியானாக
குன்றினில் தீபமாக
நிறைமிகு வடிவமாக
நேயனும் தோன்றலானான்!



நீண்டதோர் அங்கியோடு
நிகரில்லாச் சிறப்பினோடு
காண்டகு அழகினோடு
கனிந்திடும் ஞானத்தோடு
ஆண்டிடும் அமைதியோடு
அளவில்லாப் பணிவினோடு
பூண்டிடும் அன்பினோடு
புனிதனும் தோன்றலானான்!

தபமது வாழ்க்கையாக
தரித்திரம் கோலமாக
செபமது ஆன்மாவாக
யேசுவே எல்லாமாக
பவமது இல்லானாக
பரிசுத்தம் கொடையேயாக
நவமது அணியேயாக
நம்முனி தோன்றலானான்!

–வாகரைவாணன்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரு வகை இன்பம்

பண்டைக் காலத்தில் மனிதன் இயற்கையைக் காப்பாற்றினான். இயற்கையும் மனிதனைக் காப்பற்றி வந்தது. பஞ்சபூதங்கள் உலகத்திலும் உடம்பிலும் இயங்குகின்ற நுட்பங்களை அவன் அறிந்திருந்தான். உடம்பில் அவற்றின் சமநிலை தவறுமானால் உடல் நலம் கெடும் என்பதும் அப்படி சமநிலை தவறும் பட்சத்தில் அவற்றை நெறிப்படுத்திச் சீரமைத்துக் கொண்டு நலத்தோடு வாழுகின்ற முறையையும் அவனுக்குச் சின்ன வயதிலேயே குருகுலத்தில் கற்பித்திருந்தார்கள். இப்போதைய கல்வி முறையில் பண்டைக்கால உடலோம்பு முறைகள் அனைத்தும் அடிபட்டுப் போய்விட்டன. இதனால் மானிட நலமும், மகிழ்ச்சியும் ஆட்டம் கண்டுவிட்டன.

இப்படி மானிட மகிழ்ச்சி என்பது என்ன என்பதை நன்றாக அறிந்திருந்த நமது பெரியவர்கள் அந்த மகிழ்ச்சியை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்த்தார்கள். ஒன்று உடலின்பம், மற்றது ஆன்ம இன்பம். நல்ல பூரண ஆரோக்கியமான உடலால் உடலின்பம் அடைகிறோம். எவ்வளவு நல்ல உணவு வகைகள் இருந்தாலும் சரியான பசியும் முறையான செரிமானமும் இல்லாவிட்டால் அதனால் பயன் என்ன? எவ்வளவு கோடிச் செல்வங்கள் இருந்தாலும் அவற்றை அனுபவிக்க ஆரோக்கியமான உடம்பு வேண்டுமல்லவா? ஆகவே நல்ல உடல் நலம் தான் உடலின்பம் என்பது ஒத்துக்கொள்ளப்பட வேண்டிய உண்மை.

ஆன்மஇன்பம் என்பது தர்மம் தவறாத நல்ல போற்றத்தக்க ஒழுக்காறுகளால் அமைவது. இதனால் தான் நல்ல தர்மவான்கள் புண்ணியாத்துமாக்கள் என்று சொல்கிறோம். நல்ல உடல் நலம் இருந்தால் நல்ல மனநலம் இருக்கும். நல்ல மனநலத்தால் அறம் தவறாத நல்ல நடத்தை வந்துவிடும். உடம்பும் மனமும் நலம் பெற்று விடுமானால் சுயகட்டுப்பாடும் ஆன்மபலமும் தானக அமைந்துவிடுகின்றன. அப்போது மனிதன் தன்னிடமுள்ள கீழ்மைகளிலிருந்து விலகி மேன்மை பெற்று விடுகின்றான். அவனால் உலகுக்கு எந்த விதமான இடரும் இல்லை. இதுதான் சரியான மானிட மகிழ்ச்சி. இதைத்தான் திருமூலர்

உடம்பார் அழியின் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே

என்று தமது திருமந்திர நூலில் பாடுகிறார். ஆக உடம்பும் மனமும் பிரதான நலன்களாகின்றன.

# காந்தசக்தியும் மின்சக்தியும்

நாம் வாழும் பூமியிலே உள்ள இயற்க்கைக் காந்தசக்தி ஒவ்வொரு பொருளின் மேலும் ஒவ்வொரு உயிரின் மேலும் தனது காந்த ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டே இருக்கிறது. இதைப்போலவே இந்த அகல் வெளியில் (Univers) இயற்கையிலே மின் சக்தியும் அடங்கியுள்ளது. இந்தக் காந்த சக்தி, மின்சக்தி இவை இரண்டின் ஆதிக்கம் இந்த அகல் வெளியில் பெரிய கிரகம் முதல் சிறு அணுவரை அசைந்து கொண்டிருகின்றன. இந்தக் காந்த சக்தியும் மின்சக்தியும் பூமியிலே மட்டுமல்லாது மனித உடம்பிலும் இயற்கையிலும் நிலைபெற்று இயங்குகின்றன.

இயற்கையின் ஆற்றல் அல்லது இறை சக்தியின் ஆற்றல் இதயத்தில் உயிர் என்ற அற்புத சக்தியாகத் துடித்துக் கொண்டு நாம் உயிரோடு இருக்க உதவிக்கொண்டிருக்கிறது. இந்த இயற்கையின் காந்த ஓட்டம் காரணமாகவே நமது உடம்பினுள் இரத்தக் குழாய்களில் இரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறது. இப் பணிக்கு ஒட்சிசன் என்ற உயிர்வளி இடையறாது பெருந்துணையாக இருந்து வருகிறது. நாமும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இப்படி மனித உடம்பில் இயங்கும் மனித காந்தத்தை பயோக்மெக்னெட் என்றும் இதைப் போலவே மானுட தேகத்தில் இயங்கும் மின்சாரத்தை பயோ எலெக்ட்றிசிற்றி என்றும் சொல்கிறோம். மானிட உடம்பு சுறுசுறுப்போடும், ஆரோக்கியத்தோடும், உயிரோடும் இருக்க வேண்டுமானால் பயோமெக்னட், பயோ எலக்றிசிற்றி, ஒட்சிசன் இவை மூன்றின் நிலையும் பஞ்ச பூதங்களின் இருப்பும் சீராகவும் சிறப்பாகவும் உடம்பிலே அமைந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விசுவாச வாழ்வைச் செயற்படுத்துதல்

### பழைய ஏற்பாட்டில் விசுவாச வாழ்வுக்குச்சான்றுபகர்வோர்

எமது நாட்டுக்காகவும், எமது மக்களுக்காகவும் சேவை செய்வது ஒப்பற்றது. எமது வீரம்மிக்க மூதாதையரின் வரலாறுகளை நாம் போற்றுகிறோம். வேதாகமத்திலும் இத்தகைய வீரம் மிக்கவர்களை நாம் காண்கிறோம். அவர்கள் இறைதிட்டப்படி விசுவாச வாழ்வு வாழ்ந்தவர்கள்.

### ⚜ *வீரன் யோசுவா:-*

மோசேயின் மரணத்தின்பின் இஸ்ராயேல் மக்களின் தலைவராக யோசுவா நியமிக்கப்பட்டார். "எனது ஊழியன் மோசே இறந்து விட்டான். இப்பொழுது நீ புறப்பட்டு யோர்தானைக்கடந்து, நான் இஸ்ராயேலருக்குக் கொடுக்கும் நாட்டுக்குச் செல்" இவ்வாறு கூறி அவரிடம் மோசேயின் பொறுப்புக்களைக் கையளித்தார். எனவே, இஸ்ராயேல் மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டைப் பெற்றுக் கொடுப்பதாகவும், எதிரிகளின் உபத்திரவங்களுக்கு இனி இடமளிப்பதில்லையெனவும், அவர்களுடனிருந்து அவர்களைப் பாதுகாப்பதாகவும் வாக்களித்தார்.

இவர் இறைவனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி செயலாற்றத் தொடங்கிய போது இறைவன் தம் வாக்குறுதியை மக்களுக்குக் கொடுத்தார். மக்கள் யோசுவாவின் தலைமைத்துவத்தையேற்று, அதன்படி செயற்படத் தொடங்கினர். அந்நிய இனத்தவரின் நாட்டினூடாக இறைவன் கூறியபடி சென்று யோர்தான் ஆற்றைக் கடந்தனர்.

உடன்படிக்கைப்பேழை முன்செல்ல, யோர்தான் ஆற்றைக்கடந்து, பன்னிரு கோத்திரங்களையும் குறித்து ஞாபகார்த்தமாக 12 கற்களை நாட்டினர். யோசுவா மக்களை வழிநடத்திப் பாஸ்கா திருநாளைக் கொண்டாடினார். இறைவன் கட்டளைப்படி ஜெரிக்கோ நகரைக் கைப்பற்றிய வேளை, எக்காளங்களை ஊதிக்கொண்டு மக்கள் முன் செல்ல உடன் படிக்கைப்பேழையை முன்னெடுத்துச் சென்று, மதில்களை இடிந்து விழச்செய்து நகரைக்கைப்பற்றினர். இறைதிட்டத்தின்படி செயல்பட்ட யோசுவாவின் புகழ் நாடெங்கும்பரவியது.

### ⚜ *இறையருளைப் பெற்ற புறவினப் பெண்ணான 'ரூத்'*

இறைவனைப் புறக்கணித்து, உடன்படிக் கையை மீறிய மக்களுக்கு ஏற்பட்ட விளைவுகள் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. பிறமதத்த வரும் இறையாசீரைப் பெறமுடியும் என்பதனை ரூத்தின் கதையிலிருந்து நாமறியலாம்.

ரூத் இஸ்ராயேல் ஆடவன் ஒருவனைத் திருமணஞ்செய்து கொண்ட மோவா நாட்டுப் பெண்மணியாவாள். கணவன் இறந்தபின் தனது வாழ்வைப் பற்றிக் கலங்காமல், இஸ்ராயேல் இனத்தைச் சேர்ந்த தன் மாமியாரை (கணவனின் தாயை) மிக்க அன்புடன் பாரமரித்தாள். அவள் தனது மாமியாரான நகோமியுடன் மீண்டும் இஸ்ராயேலுக்கே வந்தாள். அங்கு இஸ்ராயேலரான போவாசு, ரூத்தை விரும்பித் திருமணமும் செய்து கொண்டார். இவர் இறைவனுக்கு மிகவும் பிரியமானவர்.

இவர்கள் இருவருக்கும் ஒரு பிள்ளை பிறந்தது. இப்பிள்ளையே தாவீது வம்சத்தின் அடிமரமான ஒபேது என்பவன். ரூத் வேற்றினமானாலும் இறைசித்தப்படி இஸ்ராயேல் மக்களுடன் இணைந்து வாழ்ந்தாள். பிறஇனத்தவரையும் மீட்பின் திட்டத்தில் இறைவன் பயன்படுத்தினாரென்பதை நாம் இதிலிருந்து அறியமுடிகிறது.

தாவீது கோத்திரத்தினூடாக இயேசுவின் பாட்டியாக ரூத் வரம்பெற்றார். இறைவன் எவ்வித பாகுபாடுமின்றி மனிதருக்கு அழைப்பு விடுக்கின்றார். இந்த அழைப்பை ஏற்றுக் கல்வாரி உடன்படிக் கையை முன்னெடுத்துச் செல்லும் பணி எமக்களிக்கப்படுகிறது. அதைச் சரியான முறையில் நிறைவேற்றி, இறைமக்களுக்குத் தலைமைத் துவத்தைக் கொடுக்க, சிறுவயதிலிருந்து நாம் பழகிக்கொள்ள வேண்டும். இதற்குவேண்டிய இறையருள், அருட்சாதனங்கள் மூலம் கிடைக்கின்றது.

### ⚜ *நித்திய உடன்படிக்கை—தாவீது:*

தாவீது இஸ்ராயேல் அரசை ஒன்று சேர்த்துப் பகைவரிடமிருந்து அதனைக்காப்பாற்ற, இறைவன் மட்டில் விசுவாச வாழ்வுக்குச்சான்று பகர்ந்து ஆழ்ந்த விசுவாசத்துடனும், உறுதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியுடனும் சேவை செய்தார். இறைவனின் வெளிப்பாடு நாத்தான் இறைவாக்கினர் மூலம் தாவீது அரசனுக்குக் கிடைத்தது.

"உன்வாழ்நாள்கள் நிறைவுபெற்று நீ உன் மூதாதையருடன் துயில் கொள்ளும்போது உனக்குப்பிறக்கும் வழித்தோன்றலை உனக்குப் பின்னால் உயர்த்தி அவனது அரசை நான் நிலை நாட்டுவேன். எனது பெயருக்காக ஒரு கோயில் கட்டநிலைநிறுத்துவேன். நான் அவனுக்குத் தந்தையாக இருப்பேன். அவன் எனக்கு மகனாக இருப்பான்". (2சாமு 7:12-14)

என் முன்பாக உனது குடும்பமும், உனது அரசும் என்றும் உதியாக இருக்கும். உனது அரியணை என்றும் நிலைத்திருக்கும்" (2சாமு 7:16)

பலவருடங்களின் பின் அன்று தாவீதரசனுடன் ஏற்படுத்திகொண்ட வாக்குறுதியும், உடன் படிக்கையும் நிறைவேறியதாக லூக்கா நற்செய்தி கூறுகிறது. "அவர் பெரியவராக இருப்பார். உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவரது தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சிசெலுத்துவார். அவரது ஆட்சிக்கு முடிவே இராது.- லூக்கா 1: 32,33

தாவீதின் ஆட்சிக்காலம் பொற்காலமாகும். காரணம் இஸ்ராயேலின் ஆட்சி இறைவனுக்கும், தாவீதுக்குமிடையில் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கை யாகக் கருதப்பட்டமையாகும். இந்த உடன்படிக் கையை அடிப்படையாகக்கொண்டு உலக சமாதா னமுடனான ஓர் அரசை நிறுவுவதும், அதை நிலைநிறுத்துவதும் இறைவனின் வாக்குறுதியாகும். இதன் நிமித்தம் தாவீதின் அரசவம்சத்தில் அரசராக மெசியா பிறப்பாரென இஸ்ராயேலர் எதிர்பார்த் தனர். இது காலத்தில் நிறைவேறியது. இறைமகன் பிறந்து இறைதந்தையின் விருப்பத்தை ஏற்று, விசுவாசவாழ்வுக்குச் சான்றுபகர்ந்தார். அவருக் குகந்தவரானார். இவ்வாறு உலக மீட்புப்பணியை நிறைவு செய்தார்.

## ⚜ *வீரப்பெண் தெபோரா:*

தெபோராவுக்குக் கானான் நாட்டதிபதி யாபீனின் படைகளைத் தோற்கடித்து, இஸ்ராயேல ரைக் காக்கும் பொறுப்பளிக்கப்பட்டது. இறைவனின் கட்டளைப்படி பாராக்கு எனும் இஸ்ராயேல் தலைவனின் உதவியுடன் தன் தேசத்துக்காகப் போரிட்டுச் சீசராவையும், அவன் படைகளையும் தோற்கடித்து இஸ்ராயேலரைக் காத்தாள்.

இவ்வாறு தாய் நாட்டுக்காகப் போர் முனைக்குச்சென்ற தெபோரா தம் சுகபோக வாழ்வை நாடாமல் இறைசித்தத்துக்குக் கீழ்ப்படிந்து இறைவனுக்குகந்தவளானாள்.

## ⚜ *படிப்பினைகள்*

திருமுழுக்கினூடாக உடன்படிக்கை வாழ்வினை ஆரம்பித்துள்ள நாம் மீட்புப்பணியில் ஒரு பங்காளியாகி, கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கேற்ப எமது பொறுப்புக்களை நிறைவேற்ற முன்வர வேண்டும்.

பாடசாலை, ஊர், சமுதாயம், நாடு ஆகியவற்றில் மக்களுக்காகப் பணிபுரிய முன்வரவேண்டும். அது கிறிஸ்தவ அழைப்பாகும். நமக்கு வழங்கப்படும் தலைமைத்துவத்தையும் பொறுப்புகளையும் இறைசித்தப்படி நிறைவேற்ற வேண்டும்.

### ரஜீவன் அடிகளாருக்கு அமெரிக்க 'ரைம்' சஞ்சிகை கௌரவம்

2005ம் ஆண்டின் கதாநாயகர்களில் ஒருவராக திரு/மட். மறைமாவட்டத்தின் திருக் கோவில் பங்குத் தந்தை அருட் பணி சேவியர் இருதயராஜ் ரஜீவன் அடிகளார் கௌரவிக்கப் பட்டுள்ளார்.

ஆபத்து வேளையின்போது அபாய மளிப்பதில் முன்னின்று உழைப்பவர்களில் ஒருவராக 2005 ம் ஆண்டு அமெரிக்க 'ரைம்' சஞ்சிகை அடிகளாரையும் தெரிவு செய்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தின் போது அடிகளார் ஆற்றிய அரும்பணிகளுக்காகவே இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளார். அடிகளாருக்குத் தொண்டன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிவிழாக் கண்டார் யாழ். ஆயர்



யாழ் மறை மாவட்டத்தின் ஆயர் பேரருள் தந்தை தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் தமது ஆயர் பணியில் வெள்ளி விழாக் காண்கிறார். 1981ம் ஆண்டு ஆயராகத் தெரிவு செய்யப்பட்ட அவர் அன்று புதிய மறை மாவட்டமாக உருவாக்கப்பட்ட மன்னார் மறை மாவட்டத்தின் முதல் ஆயராக நியமனம் பெற்றார். பதினொரு ஆண்டுகள் அங்கு பணியாற்றிய பின் முன்னாள் யாழ் ஆயர் பேரருள்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து 1992ம் ஆண்டு யாழ் மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார்.

1938ம் ஆண்டு ஜூலை 13ம் திகதி கரம்பொனில் பிறந்த ஆயர் அவர்கள், மடுத்தினார் குருமடம், அம்பிட்டியா தேசிய குருமடம் ஆகியவற்றில் குருத்துவக் கல்வி பயின்று 1963ம் ஆண்டு குருவானார்.

பெங்களூரில் மறைக்கல்வித் துறையில் டிப்ளோமாவும் உரோமையில் ஊர்பன் மறைபரப்புப் பல்கலைக்கழகத்தில் விவிலிய இறையியலும் பயின்ற ஆயர் அவர்கள் பக்தி, விசுவாசம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். எல்லோருடனும் இயல்பாகப் பழகும் பண்பு கொண்டவர். தாம் குருவாகப் பணிபுரிந்த காலத்தில் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பிரதேசங்களில் பங்குப் பணியாற்றியபோது மக்களின் மனம் கவர்ந்த பங்குத்தந்தையாக விளங்கினார். தமது வாழ்வில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இறை சித்தத்தை ஏற்றுப் பணிபுரிந்த ஆயர் அவர்கள் இன்று யாழ் மறை மாவட்டத்தில் இக்கட்டான ஒரு காலகட்டத்தில் மக்களின் குரலாக ஒலிக்கும் மக்களின் ஆயராக பெரும் பணி ஆற்றி வருகிறார்.

ஆயர் பணியில் வெள்ளிவிழாக் காணும் பேரருள் தந்தை தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களை - எமது சகோதர மறைமாவட்டத்தின் தலைமை ஆயரை தொண்டன் பெருமகிழ்வோடு வாழ்த்துகிறது!

இன்னும் பல்லாண்டு வாழ்ந்து அரும்பணி ஆற்றிட இறையருளை வேண்டுகிறது.

## அர்ப்பண வாழ்வுக்கு




ஆண்டவர் இயேசுவே!
நான் எனது கரங்களை உமக்குத் தருகிறேன்
உமது வேலையைச் செய்ய!
எனது பாதங்களை உமக்குத் தருகிறேன்
உமது வழியில் செல்ல!
எனது கண்களை உமக்குத் தருகிறேன்
உமது கண்கொண்டு பார்க்க
எனது நாவை உமக்குத் தருகிறேன்
உமது வார்த்தைகளைப் பேச
எனது மனதை உமக்குத் தருகிறேன்
நீர் என்னில் இருந்து சிந்திக்க
எனது ஆவியை உமக்குத் தருகிறேன்
நீர் என்னில் செபிக்க
எனது இதயத்தை உமக்குத் தருகிறேன்
உமது தந்தையையும் முழுமனுக்குலத்தையும்
நீர் நேசிப்பது போல் நேசிக்க
என்னை முழுவதும் உமக்குத் தருகின்றேன்
நீர் என்னில் வளர
ஆண்டவராகிய இயேசுவே
நீரே என்னில் வாழும்
நீரே என்னில் செயற்படும்
நீரே என்னில் செபியும்

-யாழ் ராதவல்லி

### 40 வது உலகச் சமூகத் தொடர்பு தினம்
### ஊடகம் ~ தொடர்புகளுக்கும் ஒத்துழைப்பிற்கும் ஒன்றிப்பிற்குமான வலைப்பின்னல்

கடந்த மேமாதம் 28ம் திகதி உலகெங்கும் கொண்டாடப்பட்ட 40வது உலக சமூகத்தொடர்பு தினத்தை ஒட்டி ஊடகம் தொடர்புகளுக்கும் ஒத்துழைப்பிற்கும் ஒன்றிப்பிற்குமான வலைப் பின்னல் என்னும் தொனிப் பொருளில் திருத்தத்தை 16ம் பெனடிக்ற் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தார்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடைபெற்று 40 ஆண்டுகள் நிறைகின்றவேளை யில் கொண்டாடபப்பட்ட இச் சமூகத்தொடர்பு தினம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கடன்

எங்கேயோ காற்றில் மிதந்துவந்த பாடலின் வரிகள் செவிப்பறையில் முட்டிமோதியது. ஆம் பட்ட கடன் எத்தனையோ பாரினிலிருக்கும்.... ஆமாம், பெற்றகடன், வளர்த்தகடன், செஞ்சோற்றுக்கடன் நன்றிக்கடன் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால் இத்தனை கடன்களையும் நம் வாழ்நாளில் ஈடுசெய்தாக வேண்டும் என்பதுதான் அதிமுக்கியம்.

கடன் வாங்காதிருப்பது பெரிய ஆசீர்வாதம் அதைவிட, மிகப் பெரிய ஆசீர்வாதம் கடன் கொடுக்கக்கூடிய மேலான நிலையில் இருப்பது. கடவுள் இந்த இரண்டு ஆசீர்வாதங்களையும் இணைத்தே நமக்கு வழங்கியிருக்கிறார். "நீ பல்வேறு இனத்தாருக்கும் கடன் கொடுப்பாய் நீயோ கடன்வாங்கமாட்டாய்" (இச 23:12)

சில ஆண்டுகளுக்கு முன் பத்திரிகையிலே ஒரு விளம்பரம் பிரசுரமாகி இருந்தது. இளம் வயதினர் ஒருவரால் செய்யப்பட்டிருந்த விளம்பரத்தில் ஒரு கண், ஒரு சிறுநீரகம், ஒரு கை ஆகிய உறுப்புகளைத் தான் விற்பனை செய்யப்போவதாகவும், தேவையானால் தம்மை அணுகும்படியும் விலாசமிடப்பட்டிருந்தது. பொதுவாக மரணமடையப் போகும் ஒருவர், தம் உறுப்புகளைத் தானம் செய்வது வழக்கம்.. அல்லது ஒருதாய் தன் மகனுக்கோ, ஒரு சகோதரன் தன் உடன் பிறப்புக்கோ, சிறுநீரகமொன்றை வழங்குவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இந்த நபரோ, தான் உயிரோடு இருக்கும் பொழுது, அதாவது நல்ல ஆரோக்கியமான உடல் நிலையைப் பெற்றிருக்கும் போதே, விற்பனை செய்ய முனைந்திருக்கிறார். இது மிக விசித்திரமானதாகவும், மறுபுறம் பரிதாபமாகவும் இருந்தது. காரணம் என்ன தெரியுமா?

அவருக்கிருந்த பல இலட்சம் ரூபாய் கடன் பிரச்சனைகள். இது அவரது உள்ளத்தை இரவும், பகலும் வாட்டி வதைத்ததால் அவர் இந்த முடிவுக்கு வந்துவிட்டார். அவருக்குத் தான் பட்ட கடனை எப்படியும் தீர்த்து விடவேண்டுமென்ற ஆர்வம் இப்படியொரு விளம்பரத்தைக் கொடுக்கத்தூண்டியது. மிக மகிழ்ச்சியான விடயம் தான். அநேகர் கடன் வாங்கவரும்போது தம்மைத்தாழ்த்திக் கெஞ்சி மன்றாடி, கூனிக்குறுகி கேட்டுப் பெற்றுக் கொள்கிறார்கள். பின் அதைக்குறித்து அக்கறைப் படுவதேயில்லை. கேட்கப்போனால் பகை. சிலர் கடன்களை வாங்கித் தம் மனம் போல செலவழித்து விட்டு தம் திறமை எனப்பெருமையடித்துக் கொள்பவருமுண்டு. எந்த நிலையிலும் கடன்பட்டிருப்பது வேதனைக்குரிய விடயம்தான். "கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று நம் நாட்டுப் பழமொழி கூட உண்டு.

எந்த நிலையிலும் கடன்வாங்குவதில்லை என உறுதியாகத் தீர்மானம் செய்து ஜெபிக்கும் போது கடவுள் கடன் வாங்காமல் காப்பதோடு இருக்கிற கடனையும் மேற்கொள்ள நிச்சயமாகவே உதவி செய்வார் . இ.ச. 15:6, 28:12 ஆகிய வசனங்களில் கடவுள் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்தின் மேல் கைகளை வைத்து மிக உறுதியாகச் செபித்தால் அவர் நிச்சயமாக நம் கடன் பிரச்சினைகளை எல்லாவற்றையும் மாறப் பண்ணுவார். நமது மாதந்த ஊதியத்தில் முதல் பங்கினை ஆண்டவருக்கென்றே கொடுத்து விடுவோமேயானால் மாதம் பூராவும் பணத்துக்குப் பஞ்சமேயிருக்காது.

"உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களைப் பலுகச் செய்துள்ளார். இதோ இப்பொழுது நீங்கள் விண்மீன்களைப் போல பெருந்திரளாக உள்ளீர்கள். உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் நீங்கள் இப்பொழுது இருப்பதைவிட ஆயிரம் மடங்கு உங்களைப் பெருகச் செய்வாராக! வாக்களித்தது போல உங்களுக்கு அருள்வாராக (இச 1:10-11) கடவுள் உங்களை ஆசீர்வதிக்கும் போது ஏழைகளுக்கு மனமிரங்கிக் கடன் கொடுங்கள். "ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார். அவர் கொடுத்ததை ஆண்டவர் திருப்பித்தந்து விடுவார். (நீதி 19:17) என்று வேதம்கூறுகிறது.

புதுமாதிரியான கடன் ஒன்றை புனித பவுல் அடிகளார் அறிமுகப்படுத்துகிறார். அது நற்செய்தியை அறிவிக்கவேண்டிய கடன். கிறீஸ்து நமக்காக ஜீவனைக் கொடுத்து நற்செய்தியை நமக்குத் தந்ததனாலே நாம் அந்த நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்கக் கடனாளிகளாக இருக்கிறோம். உரோமையர் 1:14-15ல் கூட இதனை வலியுறுத்தியுள்ளார்.

பணத்தினால் கடனாளியாகிவிடாமல் அன்பு செலுத்துவதிலே கடனாளியாக இருப்பது ஓர் ஆசீர்வாதமான கடன். ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன் படாதிருங்கள் (உரோ 13:8) அன்புக்குமுண்டோ அடைக்கும் தாழ்.

**—றெ. சிதம்பரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இம்முறை தொண்டனின் சில நிமிடங்களுக்காக கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி ஐயா அவர்களைச் சந்தித்தோம். வி.வி.மூர்த்தி, பன்குடா வெளிமூர்த்தி, வள்ளி, வெற்றிமகன், வேவி என்ற பெயர்களில் எழுத்துலகில் வலம்வந்த "ஜாம்பவான்". இவர் சுமார் ஐம்பது ஆண்டுகாலமாக இலக்கியச்சாதனைகள் பலபடைத்துள்ளார். அத்துடன் நாற்பது ஆண்டுகாலத்தைக் கடந்து தொடர் நடைபோட்டுவரும் "பகுத்தறிவுச் சிந்தனை முத்தமிழ்க் கழகம்" (பசிமுகம்) என்னும் அமைப்பானது, கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி ஐயாவின் இன்னொரு இமாலயச் சாதனையாகும்.

ஐயா அவர்களைச் சந்திப்பதற்காக அவர் வீட்டிற்குச் சென்றபோது மிகவும் இன்முகத்துடன் வரவேற்று மிக நீண்ட நேரம் எம்முடன் உரையாடினார்.

**:- உங்கள் சிறுவயதுபற்றி சற்றுக் கூறுங்களேன்**

:- நான் 1924ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 15ம் திகதி பிறந்தேன். எனது ஊர் பன்குடாவெளி, தகப்பனார் பெயர் காத்தமுத்து வெற்றிவேல். தாயார் பெயர் செல்லப்பா பாலாத்தைப்பிள்ளை. ஆரம்பக்கல்வியை பன்குடாவெளி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் பின்னர் புனித. மேரிஸ் பாடசாலையிலும், தொடர்ந்து எஸ்.எஸ்.சி பாடங்களை புனித. மிக்கேல் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டேன். அப்போது புனித. மிக்கேல் கல்லூரியின் அதிபராக வண. பிதா. கிறவுதர் அடிகளார் இருந்தார்.

**:- உங்கள் கல்விப்பணிபற்றி வாசகர்கட்கு எடுத்துச் சொல்வீர்களா?**

:- ஆம். 1945ல் நரிப்புல் தோட்டம் என்ற இடத்தில் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து அதற்கு அதிபராக முதல் நியமனம் செய்யப்பட்டேன். அதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர் திருவாளர் நல்லையா (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்கள். பின்னர் 1946 ஜூலை தொடக்கம் 1948 ஜூலை வரை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றேன். அதன்பின்னர் கிண்ணியா, பூவரசன் தீவுப்பாடசாலைக்கு நியமனம் செய்யப்பட்டேன். மிகவும் கஷ்டப்பிரதேச பாடசாலை. அக்காலத்தில் படிப்பிக்கும் நாட்களுக்கு மட்டும்தான் சம்பளம் தருவார்கள். விடுமுறைநாட்கள், தவணை விடுமுறைகள் எதுவுக்கும் சம்பளமில்லை. எனக்கு ஒரு மாதச்சம்பளம் ரூபா. நாற்பத்தைந்து. பின்னர் உக்குவளை, பூண்டுலோயா, வந்தாறுமூலை ம.ம.வி, பசறை, ஒட்டமாவடி, கரவெட்டி ஆகிய இடங்களில் கற்பித்தேன். இறுதியாக உறுகாமம் சரஸ்வதி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி 1970ல் ஓய்வு பெற்றேன். சிங்களம் படிக்க இயலாது என்ற காரணத்திற்காகவே குறிப்பிட்டகாலத்திற்கு முன்னராகவே ஓய்வு பெற்று விட்டேன்.

**:-1977 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மட்டக்களப்புத் தொகுதியில் போட்டியிட்டீர்கள் அத் தேர்தலில் திருவாளர்கள் செல்லையா இராசதுரை, கவிஞர் காசி. ஆனந்தன் ஆகியோரும் போட்டியிட்டார்கள். ஏன் அரசியலில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டது?**

:- அன்றைய அரசியல் சூழ்நிலை மிகவும் வருந்தத்தக்கதாகவே காணப்பட்டது. ஊழல் மிக்கதாகவும் இருந்தது. சில அரசியல்வாதிகளால் நான் கூட மிகவும் பாதிக்கப்பட்டிருந்தேன். தடவித்தடவிப் பேசுவார்கள்: ஆனால் குழிபறித்துவிடுவார்கள். இது என்னை பாதித்து விழிப்படையச் செய்தது. எங்கள் குடும்பம் பாரம்பரியம் மிக்கதொன்று. எனவே மக்களுக்குத் தொண்டாற்றவேண்டும் என்ற எண்ணம் எங்கள் குடும்பத்தாருக்கு ஏற்பட்டது. எனவே பொதுத்தேர்தலில் போட்டியிட முடிவு செய்தோம். வேட்பாளராக என்னையே என் குடும்பத்தினர் தெரிவு செய்தனர். ஆகவே தேர்தலில் போட்டியிட்டேன். அப்போட்டியில் நான் வெற்றி பெறாவிட்டாலும் மிகப்பெரும் அனுபவங்களைப் பெற்றுக்கொண்டேன். அரசியல்வாதிகள் எப்பொழுதும் மக்களுக்குச் சேவைசெய்பவர்களாக இருக்க வேண்டுமேயொழிய சுரண்டுபவர்களாக இருக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➪ :- சரி! இப்போது உங்கள் இலக்கிய வாழ்க்கைபற்றிச் சற்றுக் கூறுவீர்களா?

✍ :- நான், ஆசிரியராகப் பணியாற்றிய போது பாலர்கட்கான பாடல்கள் எடுப்பது மிகவும் கடினமாக இருந்தது. எனவே 'பாலர் பாமாலை' என்னும் கவிதை நூலை வெளியிட்டேன். 1950களில் வானொலியில் உரையாற்ற ஆரம்பித்தேன். அக்காலத்தில் ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பும்முறை இல்லை. எல்லாம் நேரடி ஒலிபரப்புத்தான்.

1946 தொடக்கம் 'தினகரனில்' எழுத ஆரம்பித்தேன். தொலைக்காட்சியிலும் பேச்சுகள் பல நிகழ்த்தியுள்ளேன். எனது இலக்கியப்பணிக்காக அரச விருதான "கலாசூரி" கிடைத்தது.

சுமார் இருபது இலக்கிய வெளியீடுகளை வெளியிட்டுள்ளேன். இறுதியாக "கம்பராமாயணத்தில் சீதை" எனும் நூல் மணிமேகலைப் பிரசுரமாக வெளிவந்துள்ளது.

➪ :- உங்களுக்கு இலக்கிய ஈடுபாடு எவ்வாறு ஏற்பட்டது.

✍ :- உண்மையில் அது எனக்கு இயற்கையாகவே உண்டான ஒன்று. நான் நிறைய வாசிப்பேன். சினிமா பார்ப்பேன். எனவே அவற்றின் காரணமாகவும் இயற்கையான உந்துதல் காரணமாகவும் இலக்கியத்தில் ஈடுபாடு உண்டானது. சில நாடகங்களை இயக்கியுள்ளேன்; சில நாடகங்களில் நடித்துமுள்ளேன். படுவான்கரைக் கிராமங்களில் இந்த நாடகங்களை மேடையேற்றி பலத்த வரவேற்புகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளேன். இதன் தொடர்ச்சியாகத்தான் எழுத ஆரம்பித்தேன்; "பசிமுகம்" என்ற இலக்கிய அமைப்பையும் ஏற்படுத்தினேன்

➪ :- உங்கள் "பசிமுகம்" அமைப்பைப்பற்றிச் சற்றுக் கூறுங்களேன்.

✍ :- ஆரம்பகாலத்தில் எங்கள் குடும்ப உறுப்பினர் அனைவரும் சேர்ந்து முத்தமிழ்ப்பண்ணை என்ற அமைப்பை உண்டாக்கினோம். பின்னர் அதனைப் பகுத்தறிவுச் சிந்தனை முத்தமிழ்க் கழகம் (பசிமுகம்) என்று மாற்றினோம். பசிமுகம் பலபோட்டிகளை நடத்தியுள்ளது. வெண்பாப் போட்டிகள், சமய சீர்திருத்தப் போட்டிகள், பெரியார் சீர்த்திருத்தப் போட்டிகள் என்பனவற்றை நடத்திப் பரிசுகள் கொடுத்துள்ளேன்.

➪ :- உங்கள் சீர்திருத்தக் கொள்கைகள் பற்றி...?

✍ :- என்னை கவர்ந்தவர்களில் பெரியாரும் ஒருவர் அவரது சீர்திருத்தக் கொள்கைகளில் எனக்கு மிகவும் ஈடுபாடு உண்டு. என்னுடைய சீர்திருத்தக் கருத்துகளை ஏளனம் செய்பவர்களும் உண்டு. ஆனால் அவர்கள் கூட விரைவில் என்னுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்வார்கள்.

சிறந்த துடிப்புள்ள விவசாயியாகவும் சுமார் 25வருட காலம் கூட்டுறவுத்துறையில் சேவையாற்றியுமுள்ள காலசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி ஐயா அவர்கள் தனது வெளியீடுகள், கலை நிகழ்ச்சிகள், 'பசிமுக' நிகழ்வுகள், பாரட்டு விழாக்கள் என்பனவற்றின் பத்திரிகை நறுக்குகள், புகைப்படங்கள் என்பனவற்றின் போட்டோ பிரதிகள் அடங்கிய தொகுப்பு ஒன்றினைத் தயாரித்து நாட்டின் பிரபலமான நூலகங்கள், பத்திரிகை நிறுவனங்கள் ஆகிய வற்றிற்கு அனுப்பி வைத்துள்ளார். அதன் ஒரு பிரதி தொண்டனுக்கும் கிடைத்தது

அதன் மற்றோர் பிரதியை அவர் எப்போதும் தம் கைவசம் வைத்துள்ளார். அதனைத் தனது காரிற்குள் இருந்து எடுத்துவந்து எமக்குக் காட்டினார். வாகனத்தில் செல்லும்போதும் நடந்து செல்லும்போதும் எப்பொழுதும் அது தனது கைவசம் இருப்பதாக கூறினார். ஏன் என்று வினவியதற்கு, அது தனது அடையாளம் என்றும் தனது மரணத்தின்போது அது தன்னை மற்றவர்களுக்கு அடையாளப்படுத்தும் ஆவணம் என்றும் கூறினார்

ஐயா அவர்களுடன் உரையாடும்போது அவர் தனது கொள்கையில் மிகவும் பிடிப்புள்ளவராகத் தென்பட்டார். இலங்கையின் ஜனாதிபதியாக டி.பி விஜயதுங்க இருந்த காலத்தில் 'கலாசூரி' என்னும் அரச விருதினை பெற்றுக்கொண்டவர். மட்டக்களப்பில் இவருக்கும் வித்துவான் F.X.C நடராஜா அவர்கட்கு மட்டுமே கலாசூரி விருது கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிலும் எப்பொழுதும் புதுமை நாடியாகவே விநாயகமூர்த்தி ஐயா காணப்படுகிறார். அவரது இலக்கியத்துறை, விவசாயத்துறை, கூட்டுறவுத்துறை, கல்வித்துறைச்சாதனைகள் இதனைச் சுட்டிக்காட்டுகின்றன. பசிமுகத்தினூடாக விருதுகள் பரிசில்கள் வழங்கிய வகையில் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை தனது சொந்தப் பணத்தில் வாரி வழங்கியுள்ளார்.

ஈற்றில் ஐயா அவர்கட்கு தொண்டனின் சார்பில் நன்றிகூறி விடைபெற்றுக் கொண்டோம்.

–ஆழியோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மோசேயின் வரலாறு

இஸ்ராயல் மக்கள் வாழ்வில் மிக முக்கியமான நிகழ்வு விடுதலைப்பயணமாகும். இப்பயணத்தின் முக்கிய நபராகக் கருதப்படுபவர் மோசேயாகும். எகிப்திய மக்கள் ஆட்சியைக் கைப்பற்றி, பாரோன் மன்னன் பரம்பரை ஆட்சிக்குவந்தது. அன்னிய நாட்டவரான இஸ்ராயலர் செல்வாக்குடன் முன்னேறு வதைப் பொறுக்க அவர்களால் முடியவில்லை. எனவே எகிப்தியர் இஸ்ராயலரை வெறுத்து, அடிமைகளாகக் கொடுமைப்படுத்தினர். நாட்டைக் காப்பதற்கும், கோட்டை கட்டுவதற்கும் இவர்களைப் பயன்படுத்தினர். இவர்கள் இனம் மேலும் அதிகரிக் காமல் இருக்கவும் இவர்களுக்குப் பிறக்கும் அனைத்து ஆண் குழந்தைகளையும் கொலை செய்யும்படி பார்வோனிடம் இருந்து கட்டளை பிறந்தது. இக் காலப் பகுதியிலேயே மோசே பிறந்தார். லேவி கோத்திரத்தில் இச் சூழ்நிலையிலேயே குழந்தையாகப் பிறந்தார். தாய் மூன்றுமாதம் வரை வீட்டிலேயே மறைவாக வைத்து வளர்த்து வந்தார். பின்னர் ஒளித்து வைக்க முடியாத நிலையில் ஒரு கூடையில் வைத்து ஆற்றிலே விட்டாள். அங்கு நீராடவந்த பாரவோனின் மகள் குழந்தை மோசேயை கண்டெடுக்கின்றாள். தான் வளர்க்க ஆசைப்பட்டு, அரண்மனைக்குக் கொண்டு வந்து அதனை வளர்க்க ஒரு செவிலித்தாயை வைத்துக் கொண்டாள். இதன்படி குழந்தையின் தாயே அமர்த்தப்பட்டாள். குழந்தை மோசே அரண் மனையில் இருக்கும் காலத்தில் அனைத்து சௌகரியங்களையும் பெற்று அரசனுக்குரிய எல்லாக் கலைகளையும் கற்றுக் கொண்டார். இளவரசி குழந்தையைத் தண்ணீரில் இருந்து எடுத்ததினால், இக்குழந்தைக்கு "மோசே" என்று பெயரிட்டாள். மோசேயின் பிறப்பு, வளர்ப்பு அக்காலத்தில் மத்திய ஆசியாவில் விளங்கிய வீரர்களின் பிறப்புமற்றும் பாரம்பரியங்களை ஒட்டியதாகும். மோசே அரண் மனையில் வளர்ந்தாலும் தன் இனத்தவர்கள்படும் கஷ்டங்கள் அனைத்தையும் கண்டு கொள்கிறார். ஒரு நாள் எகிப்தியன் ஒருவன் எபிரேயனை அடித்துத் துன்புறுத்துவதைக் கண்டு வேதனையும் கோபமும் கொண்டு அவனைக் கொன்று விட்டு தன்னை அரசன் கண்டு கொள்ளாத வண்ணம் மிதியானுக்கு ஓடிப்போனார். அங்கு தன் மாமனின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். அவ்வேளை இறைவனின் அழைப்புக் கிடைக்கிறது.

"ஒரேபு" மலையடிவாரத்தில் மந்தை மேய்த்துக் கொண்டிருக்கும் வேளை, இறைவன் எரியும் முட்செடியின் நடுவே மோசேயை அழைத்துக் கொண்டார். எகிப்தில் தன் மக்கள் படும் வேதனை யினைக் கண்டு கொண்ட இறைவன் மோசே மூலம் தன் மக்களை மீட்கச் சித்தம் கொண்டார். மோசே இறைவனின் அழைப்பிற்கு மறுப்புத் தெரிவித்தார். இருப்பினும் இறைவன் அவருக்குத் துணையாக ஆரோனைஅனுப்பி அவருக்கு வாயாக இருந்து பேசுவதாய் வாக்குக் கொடுத்தார், அற்புதங்கள் செய்யும் வல்லமையினையும் அவருக்குக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

மோசே இறைஅழைப்பிற்குப் பணிந்து எகிப்திற்குச் சென்று இறைவன் தனக் களித்த வல்லமையினையும் பயன்படுத்தி எகிப்தில் மக்களைக் காப்பாற்றி வருகையில் பல இடர்களைச் சந்திக்கிறார் அவ்வேளைகளில் எல்லாம் இறை பிரசன்னம் மோசேயுடன் இருந்து செயற்பட்டதைக் காணமுடிகிறது. இவ்வாறு மோசேயின் வாழ்வில் பிறப்பு முதல் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இறைவனின் பராமரிப்பும், பாதுகாப்பும் மோசேக்கு இருந்ததை விடுதலைப் பயணத்தில் காணமுடிகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்த விஷயம்

உலகப் புகழ்பெற்ற தத்துவஞானி சோக்கிரட்டீசைத் தேடி ஒருவர் வந்தாராம். 'வாருங்கள்' என்ன சேதி? என்று வரவேற்றார் சோக்கிரட்டிஸ்.

உங்களிடம் ஒரு சேதி சொல்ல வந்தேன் என்றார் வந்தவர். அந்தச் செய்தியைச் சொல்வதற்கு முன் சொல்லவந்த செய்தியை மூன்று சல்லடைகளில் போட்டுச் சலித்தீர்களா? என்று கேட்டார் சோக்கிரட்டீஸ் 'இல்லையே ஒன்றும் புரியவில்லையே என்றார் வந்தவர்.

முதல் சல்லடையில் நீங்கள் சொல்ல வந்தசெய்தி உண்மையானதா என்று சலித்துப் பார்த்திர்களா என்று கேட்டாராம் சோக்கிரட்டீஸ் இல்லை, உண்மையா, பொய்யா என்று எனக்குத் தெரியாது. சலித்துப் பார்க்கவில்லை என்றாராம் வந்தவர்.

சரி, இரண்டாவது சல்லடையில் நீங்கள் சொல்ல வந்த செய்தி மற்றவர்களுக்கு நன்மை யைத்தருமா அல்லது தீமையைத்தருமா என்று சலித்துப் பார்த்தீர்களா என்று கேட்டார். இல்லை நான்சொல்ல வந்த செய்தி மற்றவர் களுக்கு நன்மையைத் தருமா தீமையைத் தருமா என்று யோசித்துப் பார்க்க வில்லை.

சரி, மூன்றாவது சல்லடைக்கு வாருங்கள். நீங்கள் சொல்லவந்த செய்தி மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைத்தருமா, துன்பத்தைத் தருமா என்று சொல்லுங்கள் என்றார் சோக்கிரட்டீஸ்.

நான் சொல்லவந்த செய்தி மற்றவர்களுக்கு துன்பத்தைத் தரும் என்று என்னுகிறேன் என்று கூறினர் வந்தவர்.

நீங்கள் சொல்லவந்த செய்தியில் உண்மையுமில்லை யாருக்கும் நன்மை விளையப் போவதுமில்லை. அதுமட்டுமல்ல துன்பத்தைத்தரும் என்றும் கூறுகிறீர்கள். இத்தகைய செய்தியை நீங்கள் சொல்ல வேண்டுமா? நான் கேட்கவேண்டுமா? தயவு செய்து யோசித்துப் பாருங்கள் என்று சோக்கிரட்டீஸ் கூறினார்.

# பேசுமுன் யோசிக்க வேண்டிய மூன்று

தினந்தோறும் பல விடயங்களைப்பற்றி நாம் நமது கருத்துக்களைச் சொல்லிக் கொண்டே இருக் கின்றோம். ஆகவே பேசுவதற்கு முன்பே கீழே உள்ள மூன்று கேள்விகளைக் கேட்டுக்கொண்டு பேசுவது நல்லது.

அது உண்மையானதா? அது அன்பானது தானா? அது தேவையானதுதானா?

உரையாடலின் போது நாமே ஆக்கிரமிப்புச் செய்யாமல் இருப்பது ஒரு நல்ல பழக்கம். மற்றவர்கள் தங்களை பற்றிச் சொல்லவரும்போது நாம் நம்மைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. நம்முடைய பிரச்சினைகளை, விவகாரங்களை நமக்கு நெருக்கமானவர்களுக்காக ஒதுக்கி வைத்திட வேண்டும். உங்களுடைய சொந்த வாழ்க்கையில் எல்லோருக்கும் அக்கறை இருக்கும் என்று எதிர்பார்க்கக்கூடாது.

மோசமானவர்களிடம் நல்லவை இருக்க முடியும், நல்லவர்களிடமும் மோசமானவை இருக்க முடியும். ஆகவே மற்றவர்களின் குறைபாடுகளைப் பற்றிப் பேசமால் இருப்பதுதான் நல்லது. நண்பர் ஒருவர் ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டு அவரிடமுள்ள பணம் கறை படிந்தது என்று சொன்னார். உடனே அவர் அந்தக்கறை உங்களாலும் என்னாலும் ஏற்பட்டதுதானே என்று பதிலளித்தார்.

மற்றவர்களைப் புண்படுத்துகிற விதத்தில் பேசாமல் இருப்பது நல்லது. மற்றர்களைக் குத்திக்காட்டும் படியாகவும் பேசக்கூடாது

ஆபாசமாகப் பேசுகிறவரை எவரும் மதிக்கமாட்டார்கள் அவருடைய பேச்சு கேட்பவர்களிடம் சிரிப்பை வரவழைக்கலாமே தவிர அவரைப்பற்றிய மரியாதையை உயர்த்தாது. எதையும் அப்படியே பேசுகிறவர்களை நம்பிக்கைக்குரிய நண்பர்களாக யாருமே வைத்துக் கொள்வதில்லை. பேச்சால் எதையும் சாதிக்கலாம் . கலந்து பேசுவோம்; அன்போடு பேசுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*R.* ஸ்ரான்லி பிரபாகரன்

மனிதன் ஒரு விசித்திரமான சிருஷ்டி. ஒருவரைப் போல இன்னொருவர் இல்லை. ஒவ்வொருவருக்கும் தனித்துவம் உண்டு. இத்தனித்துவம் வெவ்வேறு எனினும், அவற்றைச் சீரான முறையில் வளர்த்தெடுக்க வேண்டும். நாம் வாழ்ந்த இயல்பான சூழலை விட்டு புதிய காட்சிகள், புதிய மனிதர்கள், புதிய இயற்கைச்சூழல் என்பன பலதடவைகளில் மனதில் பூரிப்பை ஏற்படுத்து கின்றன. அதேபோலத்தான் மனிதருக்கு இடையே காணப்படும் வேறுபாடுகளை இனங்கண்டு அவற்றில் மகிழ்ச்சி காண்பது மனித சமூகத்துக்கு முழுமையைத் தரும். வேறுபாடுகளைக் கண்டு முரண்பட்டால் அதனால் வன்முறைதான் தோன்றும்.

மனிதரின் ஆளுமையில் வேறுபாடுகளைக் கண்டு நாம்வியந்து விடுகின்றோம். ஒவ்வொரு மனிதனோடும் ஆழமாகப் பழகிப்பாருங்கள், எத்தனை தனித்துவம்! இத்தனித்துவங்களில் சீர்மையும், சீரின்மையும் காணப்படுகின்றது. இக்கட்டத்தில்தான் ஆளுமைச் சீராக்கம்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அருட்சகோதரி யோசவ்வா அவர்களின் இந்த வெளியீட்டுக்குரிய கட்டுரை மனித ஆளுமை பற்றி விளங்கிக் கொள்ள உதவியாக அமைகின்றது. இந்தக் கட்டுரையிலுள்ள விடங்களைக் கற்றுவிட்டு மற்றவர்களின் ஆளுமையை மதிப்பீடு செய்ய முனைவதைத் தவிர்த்து, நாம் முதலில் எம்மையே சுய சோதனை செய்து கொள்வதே சிறந்ததாகும்.

## பிள்ளைகளின் வளர்ச்சியும் விருத்தியும்
## *(GROWTH AND DEVELOPMENT OF CHILDREN)*

### ஆளுமை (PRSONALITY)

"அவனுக்கு அல்லது அவளுக்கு நல்ல பேசனாலிட்டி என்று கூறப்படுவதை நாம் கேட்டிருக்கின்றோம். மேலெழுந்த வாரியாக இச்சொல் ஒருவரது உடல் தோற்றத்தைக் குறிக்கவே பயன்படுகிறது. அதாவது ஒருவரது உயரம், கட்டான உடல், விரும்பத்தக்க நிறம், கவர்ச்சிகரமான நடை, உடை, பாவனைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. ஆனால் உளவியலில் ஆளுமைக்கு ஆழமான பொருளுண்டு"

பொதுவழக்கில் ஆளுமை என்று கூறும்பொழுது அதுபல கருத்துக்களை உள்ளடக்கியதாகக் காணப்படும். ஆளுமை என்றால் ஆள்தன்மை என்றுபொருள்படும். இந்த ஆள்தன்மை ஒரு மனிதன் பெற்றுள்ள உடல், உள்ளப்பண்புகள், குணாதிசயங்கள், நடத்தைக் கோலங்கள், திறமை, நுண்ணறிவு, அவருக்குள்ள தேவை, அவரில்காணப்படும் ஆர்வங்கள் இவை அனைத்தும் இணைந்து உருவாகும் நிலையைக் குறிப்பதாகும். எனவே "ஒருவருடைய ஒழுங்கான நடத்தைகளின் முழுமையானஅமைப்பே"ஆளுமை எனக் கூறலாம்.

ஒவ்வொரு மனிதரிலும் ஒரு தனித் தன்மை விளங்குவதைக் காண்கிறோம். ஒருவரை மற்றவரிடம் இருந்து பிரித்துக் காட்டும் தனித்தன்மைகள் அவரவர் ஆளுமை யில் வெளிப்படுகின்றன.

### ஆளுமையை நிர்ணயிக்கும் காரணிகள்

ஒருவருடைய ஆளுமையை பல்வேறு காரணிகள் நிர்ணயிக்கின்றன. வெவ்வேறு காரணிகளும் வித்தியாசமான முறைகளில் தனிநபர்களது ஆளுமையை வளர்க்கவோ குறைக்கவோ செய்யலாம். அவைகளில் சிலவற்றை இங்கு காண்போம்.

#### 1. பரம்பரையின் தாக்கம் :-

பரம்பரையையும் அதன் குணாதிசயங்களையும் பல தலைமுறைகளுக்கு அடுக்கடுக்காக எடுத்து செல்வது கருவுருப்பொருளான பரம்பரை அலகுகளாகும் (Genes) இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரின் உடல் அமைப்பு, அழகு, நிறம், குணாதிசயங்கள், சில நோய்கள் என்பனவற்றை பெற்றோரிலிருந்து பிள்ளைகளுக்கும், பிள்ளைகளிலிருந்து அவர்களது வழிதோன்றல்களுக்கும் கடத்துகின்றன. தற்போது மனித ஆளுமை வளர்ச்சிக்கு பரம்பரையும் மிக முக்கிய ஆதிக்கத்தை செலுத்துகின்றது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

**2. உடலமைப்பு (Constitution):-**

ஒரு மனிதன் தனது உடலை எப்படிப் பார்க்கிறான், மற்றவர்கள் எப்படிப் பார்ப்பதாக உணருகின்றான் என்பதிலும் அவனுடைய ஆளுமை வளர்ச்சி அடங்கியிருக்கின்றது. எனது நண்பர் ஒருவர் என்னைவிட சற்று நிறம் குறைந்தவர், கட்டையானவர், என்னோடு நின்று புகைப்படம் பிடிக்க அழைத்தபோது மறுத்துவிட்டார். காரணம் கேட்ட போது, தான் என்னிலும் விட கறுப்பு, கட்டையானவர், ஆகவே எனக்குப் பக்கத்தில் நின்றால் அவரை இன்னும் கூடுதலாக அழகற்ற நிலைக்கு இட்டுச் செல்லும் என்றார். ஒருவரது உடல் அமைப்பு, உயரம், நிறம், கண்ணின் கவர்ச்சி, பெண்களுக்கு தலைமுடி இவைகள் எல்லாம் ஒருவரது ஆளுமையை துலங்கவைக்கும் அல்லது தொய்யவைக்கும்.

கவர்ச்சியானவர்களோடுதான் பொதுவாக மனிதன் அதிகத்தொடர்பு கொள்ள விரும்புகிறான் என்று அனுபவங்களும் ஆராய்ச்சிகளும் சொல்கின்றன.

**3. உள்ளக்கிளர்ச்சி:-**

உணர்ச்சியின் வளர்ச்சிதான் உள்ளக் கிளர்ச்சி. உணர்ச்சி அவர் மட்டுமே அறிவது, உள்ளக் கிளர்ச்சியோ அனைவரும் அறிவது. குழந்த தனது அழுகை என்னும் உணர்ச்சி வெளிப் படுத்தலின் மூலம் தனது தேவையைப் பூர்த்தி செய்து இன்பத்தை அனுபவிக்கின்றது. ஆனால், அது வளரும் போது, அதன் அறிவு, வளர்ச்சி, வயது காரணமாக உணர்ச்சியையும், உள்ளக்கிளர்ச்சியையும் சரியான முறையில் வெளிப்படுத்தவும், கையாளவும் கற்றுக் கொள்கிறது. உணர்ச்சிகளை உரிய முறையில் நெறிப்படுத்த முடியாமல் உணர்ச்சிச் சிக்கல் உருவாகும் போது ஆளுமை வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படுகின்றது.

**4. குடும்பச்சூழ்நிலை:-**

ஒவ்வொரு மனிதனின் ஆளுமை வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைவது அவனது குடும்ப சூழ்நிலையே ஆகும். "தாயைப் போல் பிள்ளை, நூலைப் போல் சேலை" அவ்விதமே குழந்தைகள் தங்களுடைய பெற்றோரைப் பின்பற்றி வாழ்கின்றன. தாயின் அன்பு, கண்காணிப்பு இல்லையேல் குழந்தை சரியான முறையில் ஆளுமையை வளர்த்துக் கொள்வதில்லை. பெற்றோர் செய்யும் தவறுகள், அளவுக்கதிகமான கட்டுப்பாடுகள், குழந்தையின் திறமைக்கு மீறிய எதிர்பார்ப்புக்கள், ஒழுக்க முறைகளைக்கற்றுத் தருவதில் ஏற்படும் முரண்பாடுகள் முதலியன குழந்தையின் ஆளுமையைப் பாதிக்கின்றன. பெற்றோரின் அன்பைப்பெறாத குழந்தை, சமூக விரோதியாக மாற அதிக வாய்ப்புக்கள் உள்ளதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

ஒரு பிள்ளை குடும்பத்திலே தான் வகிக்கின்ற ஸ்தானத்தை பொறுத்து அதன் ஆளுமை வளர்கின்றது. குடும்பத்தில் முதல் பிள்ளையாக இருக்கும்குழந்தைஅதிகம் பொறாமையுடைய தாகவும், அதே நேரத்தில் பொறுப்புக்களை ஏற்று வழிநடத்துவதாகவும் இருக்கும். நடுப்பிள்ளையாக இருப்பவர், தாழ்வு மனப்பான்மையுடையவராகவும், தான் பாதுகாப்பற்றவர் என்ற எண்ணமுடைய வராகவும் இருப்பர். கடைசிப்பிள்ளை எல்லாவற்றிற்கும் மற்றவர்களில் தங்கியிருப்பதுடன், மற்றவர்கள் அனுதாபத்தையும், தயவையும் பெறவிரும்புவர். தனிப்பிள்ளையாக இருப்பவர் சுயநலமுடையவராகவும், மற்றவர்களைக் கட்டுப்படுத்தி வாழ்பவராகவும், அதிக சலுகைகளைக் பெறக்கூடியவராகவும் இருப்பர்.

**5. சமூக, கலாசார, பொருளாதார நிலை:-**

பெற்றோர்,வீடு, அதன்பின் ஒரு குழந்தைக்கு கிடைக்கும் சமூகம், அண்டை அயலவர்கள், பாடசாலை, விளையாட்டுக் குழுக்கள், இன, மத, கலாசார, சமூகவிதிகள், பழக்க வழக்கங்கள், நீதிநெறிகள், சட்ட ஒழுங்குகள் இவைகள் எல்லாம் ஒருவரின் ஆளுமை வளர்ச்சியில் முக்கியபங்கு வகிக்கின்றன.

பாடசாலை, பிள்ளைகளின் ஆளுமையை வளர்க்கவோ சிதைக்கவோ செய்வதில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆசிரியர் மாணவர் நல்லுறவு விளங்கும் தன்மை, பாரபட்சமற்ற நடுநிலைமை, மாணவர் வளர்ச்சியில் நல்ல ஆளுமையை வளர்க்க வழியமைக்கின்றது. மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர்களுக்கிடையிலே ஏற்படும் மோதல்கள், கருத்து வேறுபாடுகள், பழிவாங்கும் தன்மை, பாரபட்சம், ஆசிரியர்களை மாத்திரம் அல்ல, பாடத்தையும் ஏன் பாடசாலையையும் வெறுக்கும் நிலைக்கு அடி கோலுகின்றது.

விளையாட்டு மைதானம் ஒருவருடைய ஆளுமையை வெளிக்கொணர, வளர்க்க ஒரு முக்கி தளமாகக் கருதப்படுகின்றது. ஒருவருடைய ஆற்றல், தகுதி, திறமை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளும் தன்மை, பிறர் வெற்றியை பாராட்டுதல், மகிழ்ச்சியைப் பகிர்தல் போன்ற நல்ல குணாதிசயங்களை வளர்க்க உதவுகின்றது.

**6. மதம்:-**

மனிதனின் ஆளுமையை வளர்க்கும் முக்கிய காரணிகளில் மதமும் ஒன்று. பெற்றோர், மதகுருக்கள், வேதநூல்கள், அறநெறி அறிவுரைகள், இறைவழிபாடுகள் ஒருவரின் ஆளுமையின் வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

இவற்றோடு சமூக அழுத்தம், சுதந்திரம், பொறுப்புணர்வு, நம்பத்தக்க நிலை, பிறர்க்கென வாழும் பண்பு ஆகியவை ஆளுமையை வளர்க்க உதவுகின்றன என்பதை அண்மைக்கால ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன.

தொடரும்.....

*அருட்சகோதரி.* **யோசவ்வா யோசவ்**
திருச்சிலுவைக் கன்னியர் சபை
சிரேஷ்ட விரிவுரையாளர் - தாதிய பட்டப்படிப்பு
கிழக்குப்பல்கலைக்கழகம்.




## பாலையூற்றில் லூர்து அன்னையின் நூற்றாண்டு விழா

திருகோணமலை பாலையூற்று லூர்து அன்னையின் 100 வது ஜுபிலி விழா கடந்த மே மாதம் 28ம் திகதி மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பபட்டது.

திருகோணமலையில் மிகவும் பழைமை வாய்ந்த யாத்திரைத் தலமாகிய பாலையூற்றில் லூர்த்து அன்னையின் திருவுருவச்சிலை நிறுவப்பட்டு கடந்த பெப்ரவரி மாதம் 19ம் திகதி நூறு வருடங்கள் நிறைவு பெற்றுள்ளன. இதையொட்டி அன்று திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மே மாதம் 28ம் திகதி கொண்டாடப்பட்ட ஜுபிலி பெருவிழாவையொட்டி நூற்றாண்டு நிறைவு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அத்துடன் அன்னையின் புகழ்பாடும் இசைநாடா ஒன்றும் வெளியிடப்பட்டது.

அமலமரித் தியாகிகள் சபையால் நிர்வகிக்கப்படும் பாலையூற்றுப்பங்கு தந்தையாக அருட்பணியாளர் அல்பன் ராஜசிங்கன் அ.ம.தி. அவர்கள் பணிபுரிகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



## வானொலி உருவான விதம்

**வா**னொலி,தொலைத்தந்தி, தொலைபேசி இம்மூன்று கண்டுபிடிப்புக்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. கி.பி 1860 ஆம் ஆண்டு ஜேம்ஸ் கிளெர்க் மேக்வெல் எனும் ஸ்கொட்லாந்து நாட்டவர் ரேடியோ அலைகள் என்று ஒன்று இருப்பதாக உலகுக்கு அறிவித்தார். இதன் பின்னர் ஹெர்ட்ஸ் என்பவர் ரேடியோ அலைகள் இருப்பதை நிரூபித்துக் காட்டினார். இத்தாலியைச் சேர்ந்த மார்க்கோணி இத்தகைய அலைகளை பயன் படுத்தி ஒலிகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அனுப்பவும் பெறவும் முடியும் என்பதைக் கண்டறிந்தார். இவர் 1895ம் ஆண்டு இதை நிரூபித்துக் காட்டினார். 1899ம் ஆண்டு முதல் கம்பியில்லாத தகவலை இங்கிலிஸ் கால்வாய் வழியாக அனுப்பி காட்டினார். இதன் பின்னர் சில ஆண்டுகளில் "எஸ்" எனும் எழுத்தை தொலைவரித் தந்தி மூலம் இங்கிலாந்திலிருந்து நியூசிலாந்துக்கு அனுப்பிக் காட்டினார்.

1923ம் ஆண்டில் புகைப்படங்கள் ஒரு வயர் மூலம் வாசிங்டனிலிருந்து பால்டிமோருக்கு வெற்றிகரமாக அனுப்பப்பட்டன. 1892 ம் ஆண்டு முதல் மனித குரல் வானொலியில் சோதனைக்காக ஒலிபரப்பு செய்து பார்க்கப்பட்டது. 1915ம் ஆண்டு நியுயோக்கில் செய்யப்பட்ட ஒலிபரப்பு சான்பிரான்சிஸ்கோவில் பெறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டகங்களில் சவாரி செய்து கொண்டு பயணம் மேற் கொண்டிருந்த ஒரு குழுவினர் பாலை வனப்பிரதேச மொன்றின் வழியாக கிராமம் கிராமமாகச் சென்று கொண்டிருந்தனர். சூரியன் மறைந்ததும், குளிர் வாட்டும் இரவு வருவதற்கு முன்பு ஓரிடத்தில் கூடாரம் அடித்துத் தங்கி விடலாம் என்று முடிவு செய்தனர். கூடாரத்திற்கு அருகிலேயே முளை அடித்து ஒட்டகங்களை எல்லாம் கயிற்றில் கட்டிக் கொண்டிருந்தனர். கடைசியில் பார்த்தால் ஒரே ஒரு ஒட்டகத்தை மட்டும் கட்டுவதற்கு கயிறும் முளைக்குச்சியும் இல்லாமல் போய்விட்டது. என்ன செய்வதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. கட்டாமல் விட்டுவிட்டால் காத்திருந்தது. அந்த ஒட்டகம் இடத்தை விட்டு நகராமல் அங்கேயே பத்திரமாக இருந்தது. நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் மறுபடியும் தங்கள் பயணத்தைத் தொடர்வதற்குத் தயாரானார்கள். கூடாரங்களைப்பிரித்து சுருட்டிக் கட்டினார்கள். கட்டிப்போட்டிருந்த மற்ற ஒட்டகங்களை அவிழ்த்து விட்டனர். ஆனால் கட்டாமல் விட்டிருந்த அந்த ஒட்டகம் மட்டும் அந்த இடத்தை விட்டு நகராமல் அடம் பிடித்தது. காரணம் புரியாமல் தவித்த அவர்கள் மறுபடியும் கிராமத் தலைவரிடம் ஓடினார்கள்.

புதிதாக முளைத்திருக்கும் பிரச்சனையைத் தெரிந்து கொண்ட அவர் அந்த ஒட்டகத்தை அவிழ்த்து விட்டீர்களா என்று கேட்டார்.

# ஒட்டகம் சொன்ன படிப்பினை



அந்த ஒட்டகம் இரவில் எங்காவது போய் விட்டால் என்ன செய்வது என்று கைகளைப் பிசைந்து கொண்டிருந்தனர். அந்தக் கிராமத்தின் தலைவரிடம் சென்று தங்கள் பிரச்சனைக்கு ஒரு தீர்வு கேட்கலாம் என்று அவரைப் போய்ப் பார்த்தனர். அந்தக் கிராமத்திலேயே பெரிய அறிவாளியாக மதிக்கப்பட்டவர் அவர். நீண்ட தாடியுடனும் பெரியமீசையுடனும் காட்சியளித்தார். பழுத்த அனுபவசாலியாகவும் தெரிந்த அந்தத் தலைவரிடம் தங்கள் பிரச்சனையை முறையிட்டனர். மிகவும் கவனமாக அதைக் கேட்டு தெரிந்து கொண்ட அவர் விசித்திரமான தீர்வைச் சொன்னார்.

அந்த ஒட்டகத்தின் அருகில் சென்று முளை அடித்து, கயிற்றால் அதைக் கட்டிப்போடுவது போல் பாவனை செய்யுங்கள்.

இந்த வார்த்தைகளை முழுமையாக நம்பிய அவர்கள் அப்படியே செய்தார்கள். அடுத்த நாள் காலையில் எழுந்து பார்த்தால் அவர்களுக்கு ஆச்சரியம்

ஐயா! கயிறு இல்லாமல் போனதால் அவற்றை நாங்கள் கட்டிப்போடவே இல்லையே!

நேற்று ராத்திரி முளை அடித்து கயிற்றால் கட்டுவது போல் பாவனை செய்தீர்கள் அல்லவா? அது போலவே இப்போதும் கயிற்றை அவிழ்த்து விட்டு முளையத் தரையிலிருந்து பிடுங்குவது போல் பாவனை செய்யுங்கள் என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தார் கிராமத் தலைவர்.

அவர் சொன்னபடியே அந்த ஒட்டகத்தின் அருகில் சென்று கயிற்றை அவிழ்த்து விட்டு முளையைத் தரையிலிருந்து பிடுங்குவதுபோல் பாவனை செய்தார்கள். அதுவரையிலும் நகரமறுத்த அது உடனே தனது நீண்ட கால்களை எடுத்துவைத்து அங்கிருந்து புறப்படத் தயாரானது.

கயிறும் முளைக்கம்பும் வெறும் மாயைதான் ஆனால் அந்த ஒட்டகமோ அதை நிஜம் என்று நினைத்துக் கொண்டதால் அந்த இடத்தை விட்டு அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரவில்லை என்று கிராமத் தலைவர் அந்தக் குழுவினரிடம் விளக்கம் சொன்னார்.

இதைப்போன்றுதான் நாம் எல்லோருமே உண்மை அல்லாத ஆனால் உண்மை போல் நமக்குத் தெரிகின்ற நம்முடைய எண்ணங்களின் பிடியில் சிக்கிக் கொண்டிருக்ககூடும். முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியாமல் நமக்குள்ளே ஊறிப்போய்விட்ட பழக்கங்களிலும் சிந்தனைகளிலும் கட்டுண்டு கிடக்கின்றோம்.

நமக்கு நாமே பூட்டிக்கொண்ட எண்ணங்கள் தான் எதையும் அனுபவிக்கவிடாமல் நம்மை முடக்கிப் போட்டுள்ளன. நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த வாழ்க்கையை கொஞ்சம் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் எந்த அளவுக்கு நாம் செக்குமாட்டுச் சுற்றுக்குள் உழன்று கொண்டிருக்கின்றோம் என்பது புலப்படும் .இப்படி நமக்குள் ஊட்டப்பட்டுள்ள ஊறிப் போய்விட்ட பழக்கங்கள் மற்றும் சிந்தனைகளின் பிடியில் சிக்கிக் கொண்டுள்ளோம் என்பதை உணர்ந்து கொண்டால் நம் மனதிற்கு மட்டும் உண்மை போன்று தெரிகின்ற செயற்கை விலங்கைத் தகர்த்தெறிந்து விடுதலை அடைய முடியும்.

உங்களை ஓர் எல்லைக்குள் முடக்கிப் போட்டிருக்கும் அனைத்து வரையறைகளையும் ஒடுக்கி வைத்திருக்கும் கடிவாளங்களையும் தகர்த்தெறியுங்கள்! சுதந்திரமாக சிறகடித்து உயருங்கள்!

-டாக்டர் கு.சிவானந்தன்

# வாழை ஒரு மூலிகைச் செடி



உலகில் அதிகம் பயிரிடப்படும் பயிர்களில் வாழை நான்காவது இடத்தில் இருக்கிறது. மலேசியாதான் இதன் பூர்வீகம். தாவரவியல் இலக்கணப்படி இது மரமல்ல. உலகின் மிகப்பெரிய மூலிகைச் செடி.

வாழைப்பழம் கண்டறியப்பட்டு 350 ஆண்டுகள் கழித்துத்தான் அமெரிக்கர்கள் அதை ருசித்தனர். அப்போது வாழைப் பழத்தை எப்படிச் சாப்பிடுவது என்பதையும் விளம்பரப் படுத்தினர். இந்தியாவுக்கு வந்த பேரரசன் அலெக்சான்டர்தான் வாழைப் பழத்தைச் சாப்பிட்டு அதை மேற்கத்தைய நாடுகளுக்குக் கொண்டு செல்லக் காரணமாக இருந்தவர்.

'பனான்' என்றால் அரபு மொழியில் மனிதனின் விரல் என்று அர்த்தம். அதிலிருந்து தான் பனானா என்ற ஆங்கிலச் சொல் பிறந்தது.

ஒரு பெரிய வாழைப்பழத்தில் 36 கிராம் காபோஹைதரட்ரெற், 4கிராம் நார்ச் சத்து, 2கிராம் புரதம், 2கிராம் சோடியம் 602 மில்லிகிராம் பொட்டாசியச் சத்துக்கள் அடங்கியுள்ளன. ஒரு வாழைச் பழத்தில் உள்ள எரிசக்தியின் அளவு 140 கலோரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## ஆழியோன்

வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருந்து தம்முடைய விடாமுயற்சி, கடின உழைப்பு என்பன வற்றால் உயர்ந்தவர்கள் பலர். அவ்வாறு உயர்ந்தவர்களில் ஆபிரகாம் லிங்கன், இந்தியாவின் 'சந்தோசம்' சகோதரர்கள் என்று சில உதாரண புருஷர்களினை நாம் இனம் காணலாம். இவ்வாறன சிலரை நாம் நம்மிடையேயும் காணலாம். அவர்களில் பலரும் இலைமறைகாயாக மறைந்து காணப்படுகின் றார்கள். அவர்களில் மூவரைப்பற்றி இம்முறை நாம் பார்ப்போம். எனினும் அவர்களின் பெயர்களைத் தவிர்த்து விடுகின்றோம். இம்மூவரில் ஒருவர் அண்மைய கடற் பேரலையால் காவு கொள்ளப்பட்டு விட்டார் என்பது வேதனையான சம்பவம்.

இவர்களில் ஒருவர் மட்டக்களப்பின் தெற்கே அமைந்துள்ள கிராமம் ஒன்றைச் சேர்ந்தவர். அவர் ஆரம்பகாலத்தில் க. பொ.த (சா.த) தகுதி யுடன் இலங்கையின் உயர்கல்வி நிறுவன மொன்றின் பாதுகாப்பு ஊழியராக வேலைக்குச் சேர்ந்து கொண்டார். இரவுக்கடமையின்போது, நாட்டின் சூழ்நிலைகாரணமாக காவற் கூண்டுக்குள் இருந்தே கடமை செய்யவேண்டிய நிலை. எனவே அதைப் பயன்படுத்தி க.பொ.த(உ.த) புத்தகங்கள், குறிப்புகள் என்பனவற்றைப் படித்து தனிப்பட்ட பரீட்சார்த்தியாக க.பொ.த. (உ.த) கலைப்பிரிவில் சித்தியடைந்து விட்டார். அத்துடன் விடவில்லை. பேராதனைப்பல் கலைக்கழகத்தில் வெளிவாரியாக கலை இளமாணிப் பட்டமும் பெற்றுக் கொண்டார்.

இதற்கிடையில் அவ்வுயர்கல்வி நிறுவனம் பிரதமபாதுகாப்பு அதிகாரிக்கான விண்ணப் பத்தினைக் கோரியிருந்தது. அதற்கான தகுதியாக இராணுவம், கடற்படை, விமானப்படை என்பன வற்றில் மேஜர் தரம் அல்லது அதற்கொத்த தரமும், பொலிஸ் எனின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரமும் உள்ளவராய் இருக்க வேண்டும் அல்லது உயர்கல்வி நிறுவனத்தில் ஐந்துவருடம் பாதுகாப்பு ஊழியராகப் பட்டம் பெற்றவராகவும் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. நம்மவரும் விண்ணப்பித்தார். அவர் தெரிவு செய்யப் பட்டார். அவருக்கு மேலதிகாரிகளாக இருந்தவர் கட்கெல்லாம், அவர் இப்போது மேலதிகாரி.

மற்றையவர் மட்டக்களப்பு நகரைச் சேர்ந்தவர். இவர் பஸ் நடத்துனராக இருந்தவர். பெரும்பாலும் மட்டக்களப்பு-வாகரை பஸ்ஸில்தான் பணி. பயணச் சீட்டுக்கள் கொடுத்தபின் ஓடும் பஸ்ஸிலேயே படிப்பார். க.பொ.த(உ.த) சித்தியடைந்தார். பின்னர் சில காலம் குடும்பநிலை காரணமாக மத்திய கிழக்கில் வேலைபார்த்தார். திரும்பி வந்து வெளிவாரியாகப் பட்டம் பெற்றார். பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றார், நல்ல கவிஞர். அவருக்கு பெண் பிள்ளைகள் மட்டும்தான். அவர்கள் அனைவரும் இன்று மருத்துவக் கல்லூரிகளில். இவரையும், இவரின் மனைவியையும் "சுனாமி" சூறையாடிவிட்டது.

மூன்றாமவர் மட்டக்களப்பின் வடக்கேயுள்ள கிராமமொன்றைச் சேர்ந்தவர். அவரின் தந்தையார் பெரிய விவசாயி. ஏராளமான வயல்கள், நூற்றுக் கணக்கில் பட்டி மாடுகள், எருமைகள், நம்ம வருக்குப் படிக்க ஆசை.

ஆனால் தகப்பனார் கண்டிப்பானவர். மகனை பட்டிகளைப் பார்க்க அனுப்பிவிடுவார். பாட சாலைக்கு அனுப்புவதில்லை. எனவே பட்டியடிக்குச் சென்றுவிட்டு இரகசியமாக பக்கத்துப் பாடசா லைக்குச் சென்று படிப்பார். இன்று அவரும் பட்டதாரி ஆசிரியர்.

இவர் முதற்கலைத்தேர்வு எழுதிவிட்டு மத்திய கிழக்கு நாட்டிற்குச் சென்றுவிட்டார். பின்னர் அங்கிருந்து கொண்டே குறிப்புகளைப்படித்து அடுத்தலீவுக்கு வந்து பட்டப்படிப்பின் இறுதிப் பரீட்சை எழுதியவர்.

பார்த்தீர்களா? முயற்சியும், கடின உழைப்பும் இருந்தால் போதும். இறைவன் உயர்ச்சியினை அள்ளித்தருவான்.

இதற்கிடையில் இம்மூவரும் நல்ல நண்பர்கள், இவர்களை இணைத்து வைத்தது மட்டக்களப்பின் "விபுலாநந்தா வெளிவாரிப்பட்டப் படிப்புகள் கல்லூரி" என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எவர் செய்வார்




நோர்வே அனுசரணையாளர்களின் உதவியோடு உருவாக்கப்பட்ட சமாதான ஒப்பந்தம் தந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் சந்திரிகா அம்மையாரின் சண்டித்தனத்தோடு நைந்து நலிந்து மழுங்கிய சிந்தனையோடு மண்மூடிப் போய் விட்டது.

மீண்டும் ஒரு பயங்கர யுகத்துக்குள் இந்த நாடு மூழ்கிப் போவதைப் பார்த்து மக்கள் அச்சத்தால் உறைந்து போயுள்ளனர். நாடெங்கும் பரவலாக இடம்பெறுகின்ற குண்டுவெடிப்புக்கள், வன்முறைகள் குறிப்பாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் நடைபெறுகின்ற படு கொலைகள், கைதுகள், காணாமல் போதல்கள் மக்களைக் கிலி கொள்ளச் செய்து கடல் கடந்து அண்டை நாட்டை நோக்கி ஓடி அலையவைத்துள்ளன.

ஒற்றைஆட்சி, ஒரே நாடு ஒரேஅரசு என்று கோஷமிடும் அரசு, நடைபெறும் அவலங்களையும், அநியாயங் களையும் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை.

காலங்காலமாக சமாதான முயற்சிகள் என்ற திரைக்குப் பின்னால் எவையெல்லாம் நடைபெற்றனவோ அவைதான் இன்றும் நடை பெறுகின்றன என்பது அனை வருக்கும் புரியும்.

ஒரு பக்கம் சமாதானம் பேசுவோம் வாருங்கள் என்ற அழைப்பு மறுபக்கம் சண்டைக்கு ஆயுதங்கள் குவிப்பு. சமாதான மாநாடுகள் ஒருபுறம் நடக்க மறுபுறம் குண்டு வீச்சுக்கள், கொலைகள் ஆட்கடத்தல்கள். சமாதானமும் கிளைமோர்களும் எப்படி ஒன்றுபட முடியும்?

எதையுமே தரமாட்டோம் விட்டுக்கொடுக்கமாட்டோம் என்ற இறுமாப்புடன் இருக்கும்போது மேசையில் அமர்ந்தால் மட்டும் என்ன சாதித்து விட முடியும்?

பாதிக்கப்பட்டு, நொந்துபோயுள்ள மக்களின் நியாயமான உணர்வுகளைப் புரிந்து கொண்டு கௌரவிக்க முன் வந்தால் மட்டுமே சமாதானம் இந் நாட்டில் சாத்தியமாகும். இதனைச் சந்திக்க வாருங்கள், சந்திக்கவாருங்கள் என்று கிளிப்பிள்ளைபோல் அழைக்கும் அனுசரணையாளர்களும் சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ள வேண்டும்.

பல தாசப்த காலமாக உரசுப்பட்டு உரசுப்பட்டு சிதைந்து போயுள்ள இந்நாட்டு இனங்களுக்கிடையே ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு காணலாம் என்று எண்ணுவதும் கூறுவதும் சுத்த ஏமாற்றுத்தனம். இதனை சிங்கப்பூரின் முன்னாள் ஜனாதிபதி புரிந்து கொண்டுள்ளார். பிரிந்து வாழ்வதன் மூலம் மக்களுக்கு சமாதான வாழ்வை வழங்கிய அத்தகைய தீர்க்க தரிசனமுள்ள ஒரு தலைமைத்துவம் இலங்கைமக்களுக்குக் கிடைக்காமல் போனது துரதிர்ஷ்டமே.

இலங்கை மக்கள் அனைவருக்கும் கௌரவம் மிக்க சமாதான வாழ்வு என்பதில் எவருக்கும் மறுப்பில்லை. அதனை யுத்தத்தால் ஒரு பகுதியினரை அடக்கி அழிப்பதன் மூலம் பெற்றுவிடலாம் என்று சிலர் நம்புகின்றனர்.

ஒன்றுபட்டுப் போராடி வாகை சூடுவதன் மூலம் வெற்றிக்கொடி நாட்டலாம் என்று வேறு சிலர் நம்புகின்றனர். ஆனால் இவை எல்லாவற்றுக்கும் விலையாகப் போவது அப்பாவி மக்களின் இரத்தமோ என்பதுதான் துயரமானது.


தமது நாட்டு நலன்கள் மற்றும் பிராந்திய நலன்களைப் பின்னுக்கு வைத்துவிட்டு மக்களின் நலன்களை முன் வைத்து காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க முடியுமானால் சர்வதேச சமூகம் இன்னும் நிறையவே பங்காற்ற முடியும்.

-திருமூலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய வெளியீடு




தொடர்புகளுக்கு
ஈழத்து இலக்கியச் சோலை
21, ஔவையார் வீதி
மட்டக்களப்பு

திருகோணமலை ஈழத்து இலக்கியச் சோலை வெளியீடாக "திருகோணமலையின் இலக்கிய வெளியீட்டின் முன்னோடியான புலவர் அகிலேசப்பிள்ளை. என்னும் நூல் வெளிவந்துள்ளது.

பாடல் பெற்ற திருத்தலமான திருகோணமலையில் தமிழ் வளர்த்த அறிஞர்கள் பலர். அவர்களுள் மறைந்து மறைந்துபோன பலரைத் தேடிக்கண்டு பிடித்து இன்றைய தலைமுறையின் முன் நிறுத்துபவர் கலாவிநோதன் சித்திஅமரசிங்கம் அவர்கள். அவர் தனது வெளியீட்டுரையில் :

இந்த மண்ணின் முதறிஞரும் திருகோணமலையின் இலக்கிய வெளியீட்டின் முதல்வரும், திருகோணமலை நாடக இலக்கியத்தின் முன்னோடியுமான அமரர் புலவர் வே.அகிலேசப்பிள்ளை அவர்கள் பற்றிய நமது தேடலில் நம்மால் கண்டு கொண்ட ஒரு பூரணமான தகவல்கள் அடங்கிய நூலை வெளிக்கொணர்ந்துள்ளோம் எனக்குறிப்பிட்டுள்ளனர்.

இலக்கிய ஆர்வலர்களுக்கு, குறிப்பாக திருகோணமலை வாழ் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியும் பெருமிதமும் தரும் வெளியீடாக இந் நூல் விளங்குகிறது.

விலை 200/ =

## யேசுசபை இளைஞர் கழக ஒன்றுகூடல் - 2006



இவ்வாண்டு (2006) யேசுசபையினருக்கு மிகவும் முக்கியமானதொரு ஆண்டாகும். அதாவது யேசுசபை ஸ்தாபகர் புனித லொயோலா இஞ்ஞாசியார் இறந்து 450 வருடங்கள், புனித சவேரியார், முத்திபேறு பெற்ற பீற்றர் பேபர் ஆகியோரின் 50 வது ஜனனபூர்த்தி ஆகிய 3 ஜூபிலிகளை இவ்வருடம் நினைவு கூருகின்றனர். இதனை முன்னிட்டு யேசுசபையினர் பல சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அவ்வாறானதொரு நிகழ்வுதான் 14-06-2006 -17-06-2006 வரை கண்டி, லேவல்ஸ், பாத்திமா தியான இல்லத்தில் நடைபெற்ற யேசுசபை இளைஞர்கழக ஒன்றுகூடல், யேசு சபையினரால் பரிபாலிக்கப்படும் அனைத்துப் பங்குகளிலிருந்தும் ( புளியடிக்குடா, டச்பார், பொலநறுவை, ககவத்த, கந்தளாய், அளவக்க, மாலிபொட, மொறகொட) 41 இளைஞர் யுவதிகள் கலந்து சிறப்பித்தனர். அவர்களுடன் யேசுசபை குருக்கள் அனைவரும், 2 அருட்சகோதரிகளும்கலந்து கொண்டனர். 3 நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்வில் தியானப் பயிற்சி, தலைமைத்துவப்பயிற்சி, அருளுரைகள் இடம்பெற்றது மிகவும் சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தது. மேலும் கலந்து கொண்ட இளைஞர் யுவதிகள் பல்வேறு இனத்தவர்களாய் இருந்த போதிலும் எந்த ஒரு வேறுபாடுமின்றி ஒரே குடும்பமாக தங்களது பங்களிப்பை வழங்கியது குறிப்பிடவேண்டிய விடயமாகும். இவ்வாறானதொரு உறவுப்பாலத்தை இளைஞர்களிடையே ஏற்படுத்திய யேசு சபையினருக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு அவர்களது பணி மேலும் சிறப்புற இறைவனைப் பிரார்த்தித்து இளைஞர் கழகங்கள் சார்பில் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்

-A.D.நிரோஜினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தை நாம் அது இருப்பதுபோல் பார்ப்பதில்லை. நாம் பார்க்க விரும்புகிறவகையில் பார்க்கிறோம் "மக்கள் எல்லாரும் நல்லவர்கள்" என்பது ஒருகருத்து. யாரையும் நம்பக்கூடாது என்பது இன்னும் ஒரு கருத்து.

இரண்டு கருத்துக்களுக்கும் எடுத்துக் காட்டுக்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன. நாம் நமக்கு வேண்டுகிறவகையில், பிடித்தமான வகையில் ஒரு கருத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம்.

நாம் தேர்தெடுத்த கருத்துக்கு ஏற்றவாறு நாம் நம்மை காந்தமயமாக்கிக் கொள்கிறோம். காந்தம் இரும்பைத் தன்பால் இழுப்பதுபோல் நாம்

அவர் என்னைக் கோபத்தோடு கடிந்து கொண்டார் என்று நீங்கள் ஒருவரைப்பற்றிக் குறை கூறுகிறீர்கள். இதனைக் கேட்டவர் கூறுகிறார். 'அவரா, அவர் அப்படிப் பேசக் கூடியவர் அல்லவே' நீங்கள்தான் தவறாகப் புரிந்து கொண்டிருப்பீர்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? நம்மால் குறை காணப்பட்டவர் மற்றோர்கள் மனதில் நல்லெண்ணம் கொண்டவராக காணப்படுகிறார். நீண்ட காலமாக நல்லவராகவும், நல்லவற்றையே செய்பவராகவும் அவர் விளங்குவதால் மக்களுக்கு அவர்மீது நல்லெண்ணம் இருக்கிறது. யாராவது அவர்மீது குறைசொன்னாலும் கூடக் கேட்பவர்கள் குறை

# உங்கள் கண்ணோட்டம் எப்படி?

நம்முடைய நம்பிக்கைகளுக்கும், கொள்கைகளுக்கும் ஏற்றவாறான கருத்துக்களை ஈர்த்துக் கொள்கிறோம்.



எல்லாரும் நல்லவர் என்று நினைப்பவர் ஒரு திருமண நிகழ்வுக்குச் செல்லும்போது அங்குள்ள எல்லோரிடமும் சென்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டு பேசத்தொடங்கிவிடுகிறார். நல்ல நண்பர்களை உருவாக்கிக் கொள்கிறார். வாழ்க்கையில் மேலும் வளர்கிறார். பலராலும் விரும்படுபவராக இருக்கிறார். மகிழ்ச்சியானவராக இருக்கிறார். யாரையும் நம்பக்கூடாது என்று நினைப்பவர், திருமணக் கூட்டத்தில் யாருடனும் பேசுவதில்லை. மற்றவர்களும் தம்மிடம் வந்து பேசிவிடாதபடி ஒரு மூலைக்குச் சென்று அமர்ந்து கொள்கிறார். நம்மை யாரும் சாப்பிடச் சொல்லி அழைக்கவில்லையே என்று அங்கலாய்த்துக் கொள்கிறார். யாரும் தம்மை மதிக்க மாட்டார்கள் என்று தமக்குத்தாமே மெய்ப்பித்துக் கொள்கிறார். இருவருக்குமே உலகம் அவர்கள் பார்க்கிற பார்வைக்கு ஏற்றவாறு அமைகிறது. கதவு பாதி திறந்திருக்கிறது என்றும் பார்க்கலாம் கதவு பாதி மூடியிருக்கிறது என்றும் பார்க்கலாம். கதவு பாதி மூடியிருப்பதாய்ப் பார்ப்பவர்கள் தங்களைத் தாங்களே சிறைப்படுத்திக் கொள்கிறார்கள். எதுவும் செய்யாமலே நம்மால் முடியாது என்ற எண்ணங்களோடு உள்ளேயே இருந்து கொண்டு தனிமையில் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். கதவு பாதி திறந்திருக்கிறது என்று பார்க்கிறவர்கள் கதவை முழுவதுமாய்த்திறந்து வெளியில்வந்து உலகத்தில் பங்கு பெற்று, அடைய நினைப்பவற்றை அடைகிறார்கள்.

சொன்னவர்கள் மீதுதான் குறை இருக்கிறது என்று மாற்றிச் சொல்லக்கூடிய அளவிற்கு அவர்கள் நல்லெண்ணத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதுபோலவே தனி மனிதர் மட்டுமல்லாது அலுவலர்களும், தொழிற்சாலைகளும், நிறுவனங்களும் தங்களைப் பற்றிய நல்லெண்ணங்களை உருவாக்கிக் கொள்கின்றன. சோனி, அய்வா, டொயோட்டா, ஹொண்டா, மிற்சுபிஷி என்ற பெயர்களைச் சொன்னவுடனேயே நாம் இவற்றைத் தரம் வாய்ந்த நிறுவனங்கள் என்றல்லவா எண்ணுகிறோம். இந்த நிறுவனங்கள் தம்முடைய பொருட்களையோ, சேவைகளையோ பயன்படுத்திப் பார்த்திராதவர்களைக் கூட மேற்கண்டவாறு நினைக்கச் செய்கின்றன. இடைவிடாது ஒவ்வொரு நாளும் தொடர்கிற வாடிக்கையாளர் சேவையே இதற்குக் காரணம்.

இவைபோன்ற நிறுவனங்கள் வாடிக்கையாளரை மகிழ்ச்சி அடையச் செய்வதன் மூலமே தாம் வெற்றி பெற முடியும் என்று உறுதியாய் நம்புகின்றன. அதற்கான எல்லா முயற்ச்சிகளையும் எடுத்து வருகின்றன. உலகளாவிய அளவில் நல்லெண்ணம் பெற்று வளர்கின்றன. நம்முடைய நண்பர்கள் குடும்பத்தினர் குறைகளை அறிந்து தீர்வுகள் அளிப்பதையும் தேவைகள் அறிந்து நிறைவு செய்வதையும், விரைந்து மனமுவந்து செய்தோமானால் நாமும் நமது குடும்பமும் மற்றவர்கள் மனதில் நல்லெண்ணம் கொண்டவர்களாவோம்.

-இராமநாதன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய வெளியீடு**

# வாகரை வாணனின் பழந்தமிழ் இலக்கியத்தில் மட்டக்களப்புத்தமிழ்




மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழங்கும் பேச்சுத் தமிழின் பழமையையும் செழுமையையும் சான்றுகளுடன் இந்நூலின் மூலமாக ஆசிரியர் நிறுவியுள்ளார். ஒரு மொழியின் இலக்கியங்கள் அம் மொழிக்குரிய இனத்தின் வரலாறு கூறுமெனின் அம் மொழிச் சொற்கள் அதைவிடப் பழமை வாய்ந்ததாய் வரலாறு காட்டி நிற்கும் என்பதில் மறுப்பேதுமில்லை. இந்த அடித் தளத்தில் நின்றே கவிஞர் வாகரை வாணன் அவர்கள் பழந்தமிழ் இலக்கியத்தில் மட்டக்களப்புத் தமிழ் என்னும் இந்த ஆய்வு நூலை ஆக்கியுள்ளார் என்று கருதுகிறேன்.

மட்டக்களப்பில் வழங்கும் தமிழ்ச் சொற்களின் பழமையையும் செழுமையையும் சங்க இலக்கியங்கள் உட்பட பழந்தமிழ் இலக்கியங்களைச் சான்று காட்டி நிறுவும் அவர், அதனூடாக மட்டக்களப்பு உட்பட ஈழமெங்கும் தமிழர் மிகப்பழங்காலந்தொட்டே வாழ்ந்து வருகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் வித்துவான் வாகரைவாணன் அவர்கள் படைப்பிலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வரும் அதேவேளை தமிழ்மொழி, தமிழர் வரலாறு தொடர்பான ஆய்வுகளிலும் ஆர்வம் காட்டிவருபவர். ஆழ்ந்த தேடலுடன் கடினமாக உழைத்து மட்டக்களப்புத் தமிழின் தொன்மை மிகுந்த இலக்கியச் சிறப்பை இந்நூலில் பதிவு செய்துள்ளார். அவரது முயற்சி பாராட்டப்பட வேண்டியது மட்டுமன்றி கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதும் கூட. இந்நூலினைப் படித்து முடித்த பொழுது நாம் பேசுகின்ற தமிழின் செந்தமிழ்ப் பண்பை நினைத்து மகிழ்ச்சி ஏற்பட்டதோடு நாம் முன்பு பேசிய எத்தனையோ சொற்களை நாகரீகத்தின் பெயராலும், அறியாமையாலும் தொலைத்துவிட்டோமே என்ற கவலையும் ஏற்பட்டது.

(சிறப்புரையிலிருந்து)

தொடர்புகளுக்கு:
ஆரணியகம்
479, புதிய கல்முனை வீதி,
நாவற்குடா, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு
மட்டும்

முடிவுத்திகதி
**30 - 08 - 2006**




# விவிலியம் கற்போம் - 48

**(விடுதலைப் பயணம் 25: 1–39)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடம் "யூதா குலத்தைச் சார்ந்த கூரின் மகனான ஊரியின் மகன் பெட்சலேல் என்பவனை நான் பெயர் சொல்லி அழைத்துள்ளேன். ......................................., அறிவுக்கூர்மை, அனுபவம், தொழில் திறமை அனைத்தும் அவனுக்கு உண்டாகுமாறு நான் அவனை, இறை ஆவியால் நிரப்பியுள்ளேன். இதனால் அவன் பொன். ...................................... வெண்கல வேலை செய்யவும், பதிக்கவேண்டிய கற்களுக்குப் பட்டை தீட்டவும், மரத்தைச் செதுக்கவும் திட்டமிடும் நுட்பத்திறன் பெற்றுள்ளான். மேலும், ............................................. குலத்தைச் சார்ந்த அகிசமாக்கின் மகன் ஒகொலியாபு என்பவனையும் அவனோடு நியமித்துள்ளேன். ஞானமுள்ளோர் அனைவரின் உள்ளத்திலும் நானேஞானம் அருளியுள்ளதால், அவர்கள் அனைத்தையும் செய்வார் "என்றார். ........................................ மோசேயிடம்" நீ இஸ்ரயேல் மக்களிடம் அறிவிக்க வேண்டியதாவது, நீங்கள் என் ஓய்வு நாள்களைக் கருத்தாய்க் கடைப்பிடியுங்கள். ஆண்டவராகிய நானே உங்களை .................................. என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளும்படி அது எனக்கும் உங்களுக்குமிடையில் உங்கள் தலைமுறை தோறும் ஓர் அடையாளமாக இருக்கும். ............................................ கடைப்பிடியுங்கள் அது உங்களுக்குப் புனிதமானதாகும். அதன் தூய்மையைக் கெடுப்பவன் கொல்லப்படவேண்டும். அந்நாளில் வேலை செய்பவன் எவனும் தன் மக்களிடமிருந்து விலக்கி வைக்கப்படவேண்டும். ...................................... வேலை செய்யலாம். ஏழாம் நாளோ "சாபாத்து" ஆண்டவருக்குப் புனிதமான நாள். ஓய்வு நாளில் வேலை செய்பவன் எவனும் கொல்லப்படவேண்டும். ...................................... மக்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்கவேண்டும். இது எனக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையே என்றுமுள்ள ஓர் அடையாளம். ஏனெனில் ஆண்டவராகிய நான் ஆறு நாள்களில் ................................ மண்ணுலகையும் உருவாக்கி ஏழாம் நாளில் ஓய்வெடுத்து இளைப்பாறினேன் என்றார். ஆண்டவர் ...................................... மேல் மோசேயோடு பேசி முடித்தபின், கடவுளின் விரலால் எழுதப்பட்ட கற்பலகைகளான உடன்படிக்கைப் பலகைகள் இரண்டையும் அவரிடம் அளித்தார்.

*** இஸ்ரயேல், சீனாய் மலை, ஓய்வு நாளை, ஞானம், விண்ணுலகையும், ஆண்டவர், வெள்ளி, தாண், ஆறுநாள்கள், புனிதமாக்குகிறவர்.**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவுவை வளர்ப்போம்- 48

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. கடந்த மே மாத இறுதியில் பூகம்பத்தால் பல்லாயிரம் உயிர்களை இழந்த நாடு
   (ஜப்பான், இந்தோனேசியா, மலேசியா)

2. இலங்கையின் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தற்போதைய தலைவர்.
   (வில் கென்றிக்சன், எரிக்சொல்கெய்ம், விதார் கெல்கீசன்)

3. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி.......
   (கழுகாகுமா?, பருந்தாகுமா?, குயிலாகுமா?)

4. உலக உதைபந்தாட்டத் திருவிழா நடைபெற்ற நாடு
   (சுவிச்சர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி)

5. இலங்கையில் தற்போது இயங்கும் தேசிய பல்கலைக்கழகங்கள்
   (பதினைந்து, பதினான்கு, பன்னிரண்டு)

6. இரண்டாம் வேற்றுமை உருபைக் கொண்ட வாக்கியம்
   (என்வீடு, சோழமண்டலம், காலைக்கதிரோன்)

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**

**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 48**
**தொண்டன்**
**அ.பெ. எண் 44**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 46 விடைகள்

தொழுது, மலை, செயல்படுத்துவோம், பன்னிரண்டு, நல்லுறவு, உடன்படிக்கையின், மோசே. இரத்தம், நீலமணிக்கல், கற்பலகைகளை.

## அறிவை வளர்ப்போம் - 46 விடைகள்

1) செல்லம்மா
2) பொலன்நறுவை
3) அஷ்வம்
4) மணிமேகலை
5) மீசைக்கும்
6) நான்கு

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் விடை அளித்து இசை நாடா பரிசு பெறுவோர்.**

- S.P. றெக்லீன்
  117/29, கடற்காட்சி வீதி
  திருகோணமலை.
- V. சோபனராஜ்
  இல. 60, C.E.B. வீதி
  நற்பிட்டி முனை -6
  கல்முனை.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் விடை அளித்து ஐம்பது ரூபா பரிசு பெறுவோர்.**

- A. அன்ரன்
  புனித மரியாள் ஆண்கள் விடுதி
  கல்முனை
- செல்வி. R. மாதுரி
  கற்பகம் - சந்தைச் சதுக்கம்
  மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறுவோர்**

- அன்ரனி பிரசாந் ஞான சூரியம்
  ஆலய வீதி
  மூதூர் - 03
- N. றொபிலா வெற்றப்பிறவுண்
  கார்மெல் மடம்
  கல்முனை.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.** *(ஆ - ர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்.....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## ஒகஸ்ட் ~ 2006

**கத்தோலிக்க நற்சிந்தனை – நேரம் :– காலை 6.10 மணி.**

நாள்:

05, 06, 07, 08 - பெஸ்லியோ வாஸ்

09, 10, 11 - அருள் தந்தை யூஜின் போல் ஜொனதன்

19, 20, 21, 22 - மெற்றில்டா இராஜேந்திரம்

23, 24, 25 - போதகர் T.T. பிரான்சிஸ்

**சிறுவர் உலகம் – நேரம்:– மாலை 6.30 மணி.**

நாள்:- 01, 15, 29 - போட்டி, கதைகள், பாடல்கள்

புதிய உலகம் - நேரம் மாலை 6.30 மணி

நாள்:- 13, 27, - வழிபாடு, உரை, நாடகம்,
போட்டிகள் மற்றும் பாடல்கள்.

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org